# போராட்டம்

2013 மார்ச்
மலர் 1 இதழ் 3
நன்கொடை: ரூபா 30/=





08-09 வட-கிழக்கில் பெண்கள் ஆயுதமேந்தியமை முன்னேற்றமான நிலைமைகளை உருவாக்கியது

உலகப் பொருளாதார நெருக்கடி 10

சிறுநீரக நோய் தாக்கம் வெளிவரும் அதிர்ச்சிகள் 12


# மகிந்தவின் காலனிக்குள் உட்செல்லவோ வெளியேறவோ அனுமதியில்லை

கணாமல் போன தங்கள் உறவுகளை மீட்டு தாருங்கள் எனக்கோரி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடாத்த வடக்கிலிருந்து வரவிருந்த மக்கள் வவுனியாவில் வைத்து பாதுகாப்பு தரப்பினரின் கூட்டு முயற்சியினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளனர். கடந்த 5 ம் திகிதி இரவு வவுனியா நகரசபை மைதானத்திலிருந்து சுமார் 700 பேர் வரை 10 ற்கும் மேற்பட்ட பேருந்துகளில் கொழும்பு நோக்கி புறப்பட ஆயத்தமான மக்களை வவுனியாவிற்கு அப்பால் பாதுகாப்பு தர முடியாது என்றும் அனர்த்தம் இருப்பதாகவும் 6 ம் திகதி காலை புறப்படுமாறு கூறி மக்களை பொலீசார் தடுத்து நிறுத்தினர். இராணுவம் தன் கனரக வாகனங்களை வீதிகளின் குறுக்கே நிறுத்தி வீதிகளை மறித்து நின்றது. புலனாய்வு காடையர்கள் மக்கள் வாடகைக்கு அமர்த்தி இருந்த பேருந்துகளின் சாரதிகளை அச்சுறுத்தினர். 6ம் திகதியும் தொடர்ச்சியாக தடை ஏற்படுத்தப்பட்டது. ஆத்திரமடைந்த மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் செய்ததோடு வவுனியா செயலகத்திற்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்தவருடம் யாழில் வைத்து கடத்தப்பட்ட மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் லலித் மற்றும் குகன் உட்பட கடத்தப்பட்டவர்களை விடுதலை செய்யக்கோரி யாழில் ஆர்ப்பாட்டம் மேற்க்கொள்ளச் சென்ற 1200 ற்கும் மேற்ப்பட்டவர்கள் பயணித்த வாகன தொடரணி வவுனியாவில் வைத்து இதேபோன்றே பொலிசாரினாலும் இராணுவத்தினராலும் மறிக்கப்பட்டது. வீதி சேதமடைந்துள்ளது, பாலம் பழுதடைந்து உள்ளது என காரணம் கூறினர். ஆக்ரோசமாக ஆர்ப்பரித்த மக்கள் தடையை மீறிச் சென்ற போதும் ஆயுதம் கடத்தப்படுகின்றது என தாண்டிக்குளம் ஓமந்தை ஆகிய இடங்களில் சோதனை செய்து தாமதிக்க செய்தனர். இதே பாணியில் சாரதிகளை அச்சுறுத்தியமை, ஆணியறைந்த பலகைகளை வீதியில் எறிந்தமை எல்லாம் நடந்தது. இறுதியாக புளியங்குளத்தில் வாகனங்களை மறித்து காட்டு பாதையில் அனுப்பவே புளியங்குளத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திவிட்டு திரும்பினர் மக்கள் போராட்ட குழுவினர்.







**ஒரே காரணத்திற்காய் ஒரே வீதியின் இருபுறங்களில் ஒருவருட இடைவெளியில் தடுத்து நிறுத்தப்பட்ட தெற்கு , வடக்கு மக்கள். இடதுபுறம்- யாழ் செல்லவிருந்த மக்கள் போராட்ட குழு புளியங்குளத்தில். வலதுபுறம் - கொழும்பு செல்லவிருந்த வடக்கு மக்கள் வவுனியாவில்.**

இவை ஒரு வருட இடைவெளியில் நடந்த சம்பவங்கள். இரண்டிலும் எவ்வித மாற்றங்களும் இல்லை. சர்வாதிகாரி மகிந்த வடக்கை தான் யுத்தம் செய்து வென்ற காலனியாகவே பார்க்கின்றார். மகிந்தவின் காலனிக்குள் அனுமதியின்றி யாரும் பிரவேசிக்கவோ, வெளியேறவோ முடியாது. காலனியாட்சியை போல் வடக்கு இன்று மகிந்தவின் இராணுவ தளபதிகளினாலேயே ஆளப்படுகின்றது. மேலும், காணாமல் போனவர்களின் உறவினர்களின் வீடுகளுக்கு செல்லும் புலனாய்வு துறையினர் அவர்களை அச்சுறுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளிவருகின்றன.

மறுபுறம், காணாமல் போனவர்களின் உறவுகளின் துயரம், அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகளின் செல்வாக்கு சரியும் போதெல்லாம் தூக்கி நிறுத்த பயன்படும் எப்போதும் தயார் நிலையிலிருக்கும் பண்டமாகிவிட்டது. ஜெனீவாவை மையமாக வைத்து செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொள்ளவும் அரசாங்கத்தை எதிர்க்கவும் கையிலெடுக்கப்பட்ட விடயமாகியுள்ளது. காணாமல் போனவர்களின் பிரச்சனை பாரதூரமான சமூக பிரச்சினையாகும். இதனை அரசியல் இலாப நோக்கத்திற்காக பயன்படுத்தாது, பயன்படுத்தவிடாது சமூக கவனத்தை ஈர்க்கும் வகையில் தொடர் போராட்டங்களே அவசியமானதாகும்.

## ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போரில் பேரிழப்பு தோழர் சாவேஸ்க்கு போராட்டத்தின் செவ்வணக்கங்கள்



ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எவ் -வித விட்டு கொடுப்புகளையோ சமரசங்களையோ செய்து கொள்ளாமல் தொடர்ச்சியாக போராடிய மக்களின் தலைவர், தோழர் ஹியுகோ சார்வேஸ் மார்ச் ஐந்தாம் திகதி அன்று புற்றுநோயின் காரணமாக சாவடைந்துள்ளார். வெனிசுலாவில் இவர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக முன்னெடுத்த தைரியமான நடவடிக்கைகள், உல-கலாவிய கூட்டுக்கள் தென் அமெரிக்க நாடுகளிலும் உலகளாவிய ரீதியிலும் ஏகாதிபத்திய எதிர்பார்பாளர்களுக்கு பெரும் தைரியத்தையும் ஊக்கத்தையும் கொடுத்தன. கட்சி அமைப்பு என்பதினை விட இவரின் தனி மனித ஆளுமையே இவ் எழுச்சிக்கு காரணம். இவர் சமவுடமையை நடைமுறைபடுத்தினாரா, அதற்காக வெனிசுலா மக்களை நிறுவனமயபடுத்தினாரா என்பதினையெல்லாம் கடந்து ஏகபோக சுரண்டலுக்கு எதிராக உறுதியாக செயற்பட்டு உயர்ந்த மக்கள் தலைவனாக உலக மக்களால் வரலாற்றில் இடம்பெற செய்யப்பட்டுள்ளார். இவரின் மறைவு ஏகாதிபத்திய எதிர்பாளர்களுக்கும் சமவுடமைவாதிகளுக்கும் பேரிழப்பாகும்.

## இந்திய புரட்சிகர சக்திகளின் மாபெரும் வேலைநிறுத்த போராட்டம்

### 25 கோடி பேர் பங்கேற்பு



கடந்த மாதம் 20-21ம் திகதிகளில் புரட்சிகர ஜனநாயக முன்னணியின் ஏற்பாட்டில் இந்தியாவில் நாடு தளுவிய வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தில் புரட்சிகர கட்சிகளின் தொழிற் சங்கங்கள் உட்பட ஆளும் வர்க்கத்தினை பிரதிநிதித்துவப் படுத்திய தொழிற் சங்கங்களும் பங்கு பற்றியிருந்தன. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள், வளரும் நாடுகளையும் பெரும்


**தொடர்ச்சி 02ம் பக்கம்**

# வடக்கில் வலுப்பெறும் மக்கள் போராட்டங்கள்

வவுனியாவிலும் யாழ் வலிகாமத்திலும் இரண்டு பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. இந்திய வீடமைப்பு திட்டத்தில் புறக்கனிக்கப்பட்ட வவுனியா மக்கள் வவுனியா பிரதேச செயலகம் முன்பாக நியாயம் கோரி 2013.01.23 அன்று திரண்டனர். மீள் குடியேறிய நலன் பேனும் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிவழி மகஜர் கையளிக்கும் போராட்டத்தில் சுமார் 2000 த்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர். அடுத்ததாக 15.02.15 அன்று வலிகா-மம் பிரதேசத்தில் இராணுவத்தின் நிலஆக்கிரமிப்பிற்கு எதிராக மக்கள் நடத்திய உண்ணாவிரத போராட்டத்தில் 700-800 வரைய-ிலான மக்களும் தமிழ் கூட்டமைப்பு மற்றும் தென்னிலங்கை கட்சிகளின் தலைவர்களும் பங்கு பற்றி இருந்தனர். யுத்தம் நிறைவிற்கு வந்த பின் வடக்கில் இடம்பெற்ற மிக பெர-ிய போராட்டங்கள் இவை என்பது குறிபிடத்தக்க விடயமாகும். வவுனியா போராட்டத்திற்கு இந்திய வீடமைப்பு திட்டத்தின் வீடுகள் அமைச்சர் ரிசாத் பதியுதீனின் தலையீட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படாமல் அமைச்சரின் வாக்கு வங்கிகளான முஸ்லிம் மக்களுக்கு வழங்கபட்டமையும், வலிகாமத்தில் மக்களின் காணிகள் இராணுவத்தினால் அதி உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் கொள்ளை இடப்படுவதும் உடனடிக் காரணங்களாக அமைந்தன.

ஆனால் இதன் பின் மறைக்கப்பட்ட காரணங்களாக தமிழ் கூட்டமைப்பின் பங்காளிகளிற்கிடையிலான அதிகார மோதல் உள்ளது. வன்னி பிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்தும் ரெலோ, ஈ.பீ.ஆர்.எல்.எப் ஓரணி தமிழரசு கட்சி தனி பெரும் அணி ,தமிழர் விடுதலை கூட்டணி புளோட் ஒதுக்கப்பட்ட அணி என மூன்று அணிகளாக கூட்டமைப்பினுல் இழுபறியில் ஈடுப்பட்டுள்ளன. தாங்கள் தூய ஜனநாயகவாதிகள் என்ற மமதையிலும் சாதிய அமைப்பின் பிற்போக்கு தனங்களிலும் அகப்பட்டிருக்கும் தம-ிழரசு கட்சி கூட்டமைப்பினுள் தனிப் பெரும் அதிகாரங்களை நிலைநாட்டி ஏனையவர்களை ஓரம் கட்டி வருகின்றது.

தன்னை ஓரம் கட்டும்தமிழரசு கட்சிக்கு பாடம் புகட்ட ரெே-லாவும் ஈ.பீ.ஆர்.எல்.எப் உம் தருணம் பார்த்திருந்த நேரத்தில் தான் முஸ்லிம் மக்களுக்கு இந்திய வீடுகளை வாரி வழங்கி ரிசாத் வாய்ப்பை உருவாக்கி கொடுத்தார். சந்தர்ப்பத்தை சர-ியாக பயன் படுத்தியவர்கள் மக்களை பின் நின்று வழி நடத்தி பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தி தனது பலத்தை காட்டினர். இதை உடனடியாக சரி கட்ட வேண்டிய தேவை தமிழரசு கட்சிக்கு இருந்தது. வலிகாமம் அதற்கு வாய்ப்பாக அமைய உன்னவிரதம் நடத்தி தன் மேலாதிக்கத்தை நிலை நாட்டியது தமிழரசு கட்சி. வவுனியா ஆர்ப்பாட்டம் அரசாங்கத்தை சீண்டாமல் கோரிக்கை விடுக்கும் வகையில் தீவிரம் குறைந்ததாக நாடாத்தப்பட்டது. வலிகாம போரட்டமோ தென்னிலங்கை கட்சி தலைவர்கள் உண்ணாவிரதம் என தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. வழமையான புலானாய்வாளர்களின் அட்டகாசம் குறித்து வழமைபோல் கதைக்க தேவையில்லை, இம்முறை மக்களே கதைத்து விட்டார்கள். எது எப்படி இருப்பினும் மக்கள் அரசின் மீதான அச்சத்தை துறந்து களத்தில் இறங்கி இருப்பது ஆரோக்கியமான விடயம். தன் குடுமி பிடி சண்டையை விடுத்து கூட்டமைப்பின் கட்சிகள் மக்களுக்காக ஒன்றுபட முயற்சிக்க வேண்டும். திரண்ட மக்களை பார்த்தால், மக்களுக்கு போராட யாரும் கற்று கொடுக்க தேவை இல்லை தலைவர்களுக்கு தான் வழிநடத்த கற்று கொடுக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இச் சந்தர்ப்பவாத தலைவர்களிடமிருந்து மக்களை மீட்டெடுப்பது புரட்சிகர தலைவர்களின் கடமையாகும். இம்முறையும் தவறு நடக்குமாயின் திருத்தி கொள்ள இனி சந்தர்ப்பம் கிடைக்காது.

# வேண்டாம்! வேண்டாம்! கூடங்குளம் வேண்டாம்!!

## கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்




இந்தியாவின் கூடங்குளம் அணுமின் நிலையத்தின் கதிர் வீச்சுகக்கசிவு தொடர்பாக வெளியான தகவலை தொடர்ந்து அதற்கு இந்திய மத்திய அரசு பதிலளிக்க வலியுத்தி பெப்ரவரி மாதம் 5ம் திகதி ஒரு மணியளவில் இந்தியாவின் இலங்கை தூ தரகத்திற்கு முன்னால் மாபெரும் ஆர்பாட்டம் இடம் பெற்றுள்ளது. இவ் ஆர்பாட்டத்தை Green for Chenge என்ற அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.அத்துடன் காவல்துறையினரின் கடும் கெடுபிடிகளுக்கும் பாதுகாப்புக்கும் மத்தியில் இவ் ஆர்ப்பாட்டம் நடந்து முடிந்தது குறிப்பிடத்தக்கது.

# முதலாளித்துவம் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே அனைத்தையும் செய்கிறது

## இந்திய மக்கள் கலை இலக்கிய வட்டத்தின் மாநில பொதுச் செயலாளர் மருதயன்

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மானம் 2009 ம் ஆண்டு வடக்கில் நடைபெற்ற இருதிக் கட்ட யுத்தத்தின் போது நடைபெற்ற போர்க்குற்றம் சம்பந்தமாக ராஜபக்ச அரசாங்கம் இராணுவ நீதிமன்றத்தை அமைத்து போர்க்குற்றங்கள் சம்பந்தமாக விசாரனை நடத்துவது தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்வதற்காகவே.அமெரிக்கா கொண்டு வந்துள்ள தீர்மாணம் ராஜபக்ச அரசாங்கத்தை காப்பாற்றுவதும் அதற்கு சில நிபந்தனைகளை வழங்கி இலங்கையில் தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்வதுமே ஆகும்.அமெரிக்கா கொண்டு வந்துள்ள இத்தீர்மாணம் யாரையும் பாதிக்காத அளவு உடல் முழுவதும் எண்ணெய் பூசிக் கொண்டு வழுக்கி நழுவித் தப்பிக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் என்னமாகும்.

உலகம் முழுவதும் மனித உரிமைகளை மீறியதும் குர்திஸ் மக்களை அழிப்பதற்காக ஈராக்கிய முன்னால் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு இரசாயன ஆயுதங்களை வழங்கிய அமெரிக்கா இருதியில் யுத்தக் குற்றவாளி என தீர்ப்பளித்து சதாம் ஹுசைனுக்கு தூக்குத் தண்டனை வழங்கியது. தாம் யுத்தக் குற்றங்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவேயாகும்.

2009ம் ஆண்டு இலங்கையில் முள்ளிவாய்க்காளில் நடைபெற்ற இருதிக்கட்டப் போரை செயற்கை கோள்களின் மூலம் பார்த்த அமெரிக்கா யுத்தத்திற்கு ஆதரவாக செயற்பட்டு யுத்தத்தில் பாதிக்கப்டும் மக்களை காப்பாற்றாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கா இன்று இதற்கு எதிராக செயற்படுகின்றது. 2009ம் ஆண்டு யுத்தம் முடிந்த பின் இலங்கையிலிருந்து இராணுவப்படையினரை ஆப்கானிஸ்தானில் அமெரிக்க படையினருக்கு ஆதரவாக போராடுவதற்கு இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவிடம் கேட்டபோது அதிகமாக முஸ்லிம்கள் வாழ்கின்ற படியால் நேரடியாக அனுப்ப முடியாது எனவே தனியான படையணியொன்றை அமைத்து அனுப்பலாம் என கோத்தாபய ராஜபக்ச கூறினார். எக்காலத்திலும் அமெரிக்கா மனித உரிமைக்கும் ஜனநாயகத்திற்கும் துனைபோனதில்லை. ஈராக் மீதான ஆக்கிரமிப்பை ரஷ்யா ஜேர்மனி மற்றும் உலகின் பல நாடுகள் ஆட்சேபித்தபோது அதையும் பொருட்படுத்தாது அமெரிக்கா ஈராக்கியர்களுக்கெதிரான போரை நடத்தியது.

ராஜபக்ச அரசிற்கு எதிராக இந்தியா ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டும்.ஏன் கொண்டுவராதென்றால் இருதிக்கட்டப் போரை முன்னின்று நடத்தியதுடன் இலங்கை இராணுவத்திற்கு நீண்ட ஆயுதப்போராட்டத்தை நடத்துவற்குமான பயிற்சியையும் ஆயுதங்களையும் வழங்கியதுடன் அதற்கான ஆலோசனைகளையும் வழங்கியது இந்திய அரசுதான்.ஜெனிவா மனித உரிமை பேரவையினால் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவினால் கொண்டு வரும் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்க வேண்டும் என தமிழ் நாட்டில் பல மாவட்டங்களிலும் மாணவர் போராடட்டங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலையில் இந்திய அரசு இலங்கைக்கு எதிராக செயற்படுவதற்கு பின் நிற்கின்றது.

1971ல் இலங்கையில் ஏற்பட்ட இடது சாரிப்புரட்சியை அடக்குவதற்கு இந்திய அரசு இலங்கைக்கு கடற்படை மற்றும் விமானப்படையை அனுப்பியது.1983ம் ஆண்டு இந்திய அரசு இலங்கை போராளிக்குழுக்களுக்கு பயிற்சிகளை வழங்கி தனது தேவையை பூர்த்தி செய்து கொண்டது. 1987ம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துடன் கூட்டு உடன்படிக்கை செய்து கொண்டு இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பிய போது உண்மை வெளிப்பட்டது. 2002ம் ஆண்டு யாழ்கோட்டையை புளிகல் முற்றுகை இட்டபோது அங்கிருந்த ஆயிரக்கணக்கான இலங்கை இராணுவத்திணர் நிர்க்கதிக்கு உள்ளாகினர். நிர்க்கதிக்கான இலங்கை இராணுவத்தினரை காப்பாற்றுவதற்காக இந்திய அரசுதான் போரை கைவிடுமாறு உத்தரவிட்டதைத் தொடர்நது போர்நிறுத்தம் செய்யப்பட்டது.

இந்தியா இருதிக்கட்ட யுத்தத்திறகு ஆதரவு வழங்கி அதனை வழிநடத்திச் சென்றபடியால் இன்று அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணைக்கு ஆதரவு வழங்கினால் தாமும் யுத்தக்குற்றவாளி ஆகிவிடுவோமோ என்ற பயத்தினால்தான் இந்தியா அரசு இன்று பிரேணைக்கு எதிர்பப்புத் தெரிவிக்க முடியாமலும் ஆதரவு வழங்க முடியாமலும் தடுமாறுகின்றது.

இலங்கை மக்கள் இதற்கு ஏமாராது அனைத்து பாட்டாளிவர்க்கத்தினரும் ஒன்றிணைந்து முதலாளித்துவ இலங்கை அரசுக்கு எதிராக போராடி தமது உரிமைகளை வென்றிடவேண்டும் என கூறியுள்ளார்.

இந்திய புரட்சிகர சக்திகளின் மாபெரும்....பக்கம் 1

நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. இந்த பொருளாதார நெருக்கடியானது ஆளும் வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்த தொழிற்சங்கங்களை கூட பங்குபற்ற நிர்ப்பந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தப் போராட்டத்திற்கு முற்போக்குவாதிகள், ஜனநாயகவாதிகள், மக்கள் நல அமைப்புக்கள், விவசாயிகள், மாணவர்கள், புத்திஜீவிகள் மற்றும் அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் 25 கோடி பேர் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றியிருந்தனர். விலைவாசியை கட்டுப்படுத்து வேலைப்பாதுகாப்பை உறுதிப்படுத்தி வேலைவாய்ப்புகளை அதிகரி, தொழிலாளர் நலச் சட்டங்களை கடுமையாக அமுல்படுத்து, முறைசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூகப் பாதுகாப்பை உறுதிசெய், ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர் முறையை அகற்று, சமவேலைக்கு சம ஊதியம் வழங்கி குறைந்தபட்ச ஊதியம் ரூ.10 ஆயிரம் என சட்டமியற்று தொழிற்சங்க உரிமைகளை அமுல்படுத்து என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது.

இதேபோல தமிழகத்தில் பெப்ரவரி மாதம் 2- 10ம் திகதி வரை பிரச்சாரத்தையும் தொடர் போராட்டங்களையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் அதன் அனைத்திந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம் ஆகியன, வரட்சி நிவாரணக் கோரிக்கைகளில் தேசிய கிராமிய வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டம், வேலைநாட்களை 180 நாட்களாக அதிகரிக்க வேண்டும ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து நடத்தியது. இந்த போராட்டத்திற்கு தமிழக அரசு அடிபணிந்ததோடு கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டது.

# வெறி நாய்களை தெருவில்விட்டுவிட்டு ஜெனிவா பயணம்

ஐக்கிய நாடுகளின் மனித உரிமை மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதிதுவபடுத்தி அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமயிலான குழுவினர் ஜெனிவா சென்றுள்ளனர்.

ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்தில் ஐரோப்பிய யூனியன் , இந்தியா உட்பட கடந்த முறை இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த





பல நாடுகள் இம்முறை எதிராக வாக்களிக்க இருப்பதாக தகவல்களை ஊடகங்கள் வெளியிட்டுள்ளன. ஜெனிவா மாநாடு தம்மை ஒன்றும் செய்திடாது என இலங்கை அரசாங்கம் தெனாவெட்டாய் கூறி வருகின்றது. அரசாங்கம் அந்த தெனாவெட்டின் பின்னால் இரண்டு விடயங்கள் மறைந்து நிற்கின்றன. முதலாவது விடயம் ஏகாதிபத்திய நாடுகளிற்கு இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்தவோ,நிலைநாட்டவோ அல்லது தமிழ் மக்களுக்கு தீர்வை பெற்று கொடுப்பதற்கான திட்டமோ நோக்கமோ இல்லை, மாறாக தங்கள் உலகமயமாக்கள் பொருளாதார அரசியல் தேவைகளுக்காக அரசாங்கத்தை தன் வழிக்கு கொண்டு வரும் நோக்கமே இருக்கின்றது. ஆகவே, தனக்கு புதிய தாராளமயவாதத்தினுள் மேலும் பயணிப்பதற்கு, ஏகாதிபத்தியத்தின் எத்தகைய வளர்ச்சியும் தடையாக இருக்க போவதில்லை என்பதை அரசாங்கம் நன்கு அறியும். இரண்டாவது விடயம் நாட்டில் உருவாகி இருக்கும் நெருக்கடிகளில் இருந்து மக்களை திசை திருப்பி போலி தேசப் பற்றை வளர்த்து வர்க்க பேதங்களை மறக்கடிக்க செய்ய ஜெனிவா மாநாடு அரசிற்கு கிடைத்த வரமாகும். அதனை புரிந்து கொள்ள நெருக்கடிகள் என்ன வென்று நன்கு விளங்கி கொள்ள வேண்டும்.

மேலோட்டமாக பார்க்கும் போது நாட்டில் பொருளாதார நெருக்கடிகள் இல்லை என்றே தோன்றும். மத்தள சர்வதேச விமான நிலையம் திறப்பு விழா காண இன்னும் சில வாரங்களே இருப்பதினை தொலைகாட்சிகளில் தோன்றிடும் சிறுவர்கள் உரக்க கூறி நினைவுபடுத்தி வருகின்றனர். இலங்கை போன்ற சிறிய நாட்டிற்கு இரண்டு சர்வதேச விமான நிலையங்கள் அவசியமா என்பதும் ஒரு கேள்வியாகும். சிங்கபூரிலிருந்து மத்தள விமான நிலையத்திற்கான பயண நேரத்தை விட அதிக நேரம் மத்தளவிலிருந்து கொழும்பு பயணிக்க தேவை என்ற நிலையில் மத்தள சர்வதேச விமான நிலையம் எந்தளவு பயனுடையதாக இருக்கும் என்பது இன்னுமொரு பிரச்சனையாகும். இவ்வளவு சிக்கல்களிற்கு மத்தியிலும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாயையை உருவாக்குவதில் அரசாங்கம் வெற்றியடைந்துள்ளது. ஆனாலும் மக்கள் பொருளாதார சுமையை கடுமையாக உணர ஆரம்பித்திருக்கின்றார்கள்.

கடந்த பெப்ரவரி 22 நள்ளிரவு முதல் எரிபொருள்களின் விலை மீண்டுமொரு முறை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. டீசல் ஒரு லீட்ட்டரின் விலை 6 ரூபாவாலும் பெற்றோல் ஒரு லீட்டரின் விலை 3 ரூபாவாலும் மண்ணெண்ணெய் ஒரு லீட்டரின் விலை 4 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். கடந்த 2012 டிசம்பர் 15 ம் திகதி அன்றும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். எரிபொருட்களின் விலையேற்றம் தொடர்பாக அரசாங்கம் தரும் விளக்கம் புதிய தாராளமயவாத முதலாளித்துவத்தின் உண்மையான இயல்பு தொடர்பான விளக்கத்தை தருகின்றது. உலக எண்ணெய் சந்தையில் நிலவும் கேள்வியே எரிபொருட்களின் விலையை தீர்மானிப்பதாகவும் உலக சந்தையில் விலையேற்றம் நிகழும் போது இலங்கையிலும் விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாக அரசாங்கம் கூறுகின்றது. மேலும் எரிபொருட்களிற்கோ வேறு எதேனுமொன்றிற்கோ மானியம் தர முடியாது என்பதாகும். எரிபொருள் விலையேற்றம் பொருளாதரத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகும்.

அரிசி விலை அதிகரிக்கப்பட்டால் அதனை சோறு உண்பவர்கள் உணர்வார்கள். சீனி விலை அதிகரிக்கப்பட்டால் தேனீரின் விலையிலிருந்து சீனியை பயன்படுத்தி தயாரிக்கப்படுபவை அனைத்தினதும் விலையும் உயர்வடையும். எரிபொருள் போக்குவரத்துடன் தொடர்புடையது எனினும் அதன் விலையேற்றம் ஏனைய அனைத்தினதும் விலையை உயர்வடைய செய்யும் . இப்படியான விளைவுகள் இருபினும் எரிபொருள் விலையை அதிகரித்து(வரிகளை குறைக்காமல்) சுமையை மக்கள் மீது முழுமையாக சுமத்தியுள்ளது அரசாங்கம். இவ்வாறு மக்களை கஷ்டத்திற்கு ஆளாக்கி அறவிடப்படும் வரி பணத்தின் பெரும் அளவு வாங்கிய கடனை செலுத்தவும் கடனுக்கான வட்டியை செலுத்தவுமே பயன்படுத்தப்படுகிறது. நாடு கடனுக்குள் சிறை பட்டிருக்கிறது. 2012 ம் அண்டு இறுதியில் நாட்டின் மொத்த கடன் தொகை 22.81 பில்லியன் டொலர்கள் ஆகும். அரசாங்கம் மேலும் சர்வதேச நாணயநிதியத்திடம் மேலும் ஒரு பில்லியன் டொலர் கடனை

> **தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, அவர்கள் வாழ்வு அரசாங்கத்தினால் சீரழிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சுபீட்சத்தை வழங்கியதாக சொல்லி திரிகிறது**

கோரிய போதும் அக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பின், தற்போது "நிபந்தனை உடனான கடன் எமக்கு வேண்டாம்" என வீராப்பு பேசி திரிகிறது அரசாங்கம்.இத் துண்டு விழும் தொகையை ஈடு செய்ய மேலும் குறுகியகால கடன்களை பெறுவதே அரசாங்கத்தின் மாற்று திட்டமாகும்.

அண்மையில் மத்திய வங்கி 60 பில்லியன் பெறுமதியான அரச கடன் முறிகளை விற்பனை செய்தது. கடன் முறிகளுக்கு 152.12 பில்லியன் டொலர் கேள்வி கிடைத்ததாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. அதாவது மத்திய வங்கி தான் கோரியதிற்கும் அதிகமான கடன் சர்வதேச வர்த்தக வங்கிகளிடமிருந்து கிடைக்கபெற்றதாக தெரிவித்துள்ளது. சர்வதேச விமான நிலையம் உட்பட கண்காட்சி அபிவிருத்திக்காக இவ்வாறு பெறப்படும் பணமே பயன்படுத்தப்படுகின்றது. அரசாங்கம் தான் கடன் பெற்றதினால் நெருக்கடியில் இல்லை என்பதை காட்டுவதற்காக மேலும் கடன் பெற்று கண்காட்சி எமாற்று அபிவிருத்தி திட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றது. இறுதியாக இந்த நெருக்கடிகள் ஏற்படுத்தும் சுமையை சுமக்க வேண்டிய பொறுப்பு மக்கள் மீது சுமத்தப்படுகின்றது.

**விரக்தியின் விளைவுகள்**

உற்பதியில் எவ்வித முன்னேற்றமும் இல்லாது கடன்பெற்று, உருவாக்குவதாக காட்டும் ஆசியாவின் ஆச்சர்யம் ஏற்படுத்தும் விரக்தி, பாரதூரமான அவலங்களிற்கும் சீரழிவிற்கும் வழிகோலியுள்ளன. தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு, அவர்கள் வாழ்வு அரசாங்கத்தினால் சீரழிக்கப்பட்டுள்ளது. ஆனால் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு சுபீட்சத்தை வழங்கியதாக சொல்லி திரிகிறது. இவ்வருடத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கறுப்பு ஜீலை கலவரத்திற்கான ஆரம்ப புள்ளியையிட்டுள்ளது. அநேகமான முஸ்லிம் பிரதேசங்களில் தனக்கு எதிரான வன்முறை எப்போது ஆரம்பிக்குமோ என மக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர்.

அதிகரித்து வரும் நெருக்கடிகள் சிங்கள மக்கள் மத்தியில் பலத்த விரக்தியை உருவாக்கியுள்ளது. அண்மைய காலங்களில் மத உணர்வு அதிகரிக்கவும்,மக்கள் விகாரைகளை நோக்கி படையெடுக்கவும் இது தான் காரணம். பெண்களிற்கு எதிரான வன்முறைகள் ,கொலைகள், குற்றங்கள், மற்றும் தற்கொலைகள் அதிகரித்திருப்பதும் இவ் அதிருப்தி மற்றும் விசனத்தின் காரணமாக தான்.இவ் அதிருப்திக்கும் விசனத்திற்கும் அரசாங்கமே பொறுப்பு கூறவேண்டியவர்களும் காரணமானவர்களும் ஆயினும் தனது இருப்பை தக்க வைக்கவும் இவ் விரக்தி நிலையை யுக்தியாக பயன்படுத்துகின்றார்கள்.

நடைமுறை பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் சமூக-பொருளாதார பிரச்சனைகளிலிருந்து மக்களை திசை திருப்ப இனவாதத்தை தூண்டிவிடும் கீழ்தரமான யுக்தியை அரசாங்கம் கையாளுகிறது. இதன் காரணமாக தான் நாட்டில் புரையோடியிருக்கும் இனவாதத்தை மேலும் மேலும் வளர்க்க அரசாங்கம் அனுசரணை வழங்குகிறது. முதலாளித்துவம் வளர்ச்சியடையும் போது ஆசிய உற்பத்தி முறை ஏற்படுத்திய பிற்போக்குதனத்தின் எச்சங்கள் மறைந்துவிடும் என்றே புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. புத்தகங்களுக்கும் யதார்த்தத்திற்கும் குறிப்பிட்டளவு இடை வெளி இருக்கின்றது. புதிய தாரளமய வாதம் இலங்கை போன்ற பின்தங்கிய நாடுகளில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள இவ் எஞ்சிய பிற்போக்கு தனங்களை தான் பயன்படுத்துகின்றன. பொது பல சேனா போன்ற அடிப்படைவாத அமைப்புக்கள் உருவாகுவதன் பின்னணியும் இது தான். கலகோடவத்த ஞான சேகர போன்ற குள்ளநரிகள் சில வாரங்களில் மக்கள் தலைவானாவதற்கு அரசாங்க அனுசரனை மற்றும் மக்களின் விரக்தி நிலை தான் காரணம்.

இனவாதம் மற்றும் மதவாதத்தை தூண்டி விடுவது வெறிநாயை கட்டவிழ்த்து விடுவதற்கு சமமானதாகும். விரக்தி விசனத்திற்கு ஆளான சாமானியர்களிடம் இனவெறி மதவெறி இலகுவாக பரவி விடும். பின் அதனை

**தொடர்ச்சி 15ம் பக்கம்**

# மீண்டும் ஜெனீவா-மீட்டுத்தருமா எம் உரிமைகளை ?









### இல்லை என்பதைத் தவிர வேறொன்றும் இல்லை

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் முழுமையாக குடியமர்த்தப்படவில்லை, யுத்தத்தில் சொத்துக்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்தவர்களுக்கு எவ்வித நிவாரணமோ இழப்பீடோ வழங்கப்படவில்லை, யுத்தத்தில் அவயங்களை இழந்தவர்களிற்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை, சுதந்திரமான ஊடக செயற்பாடுகளிற்கோ அரசியல் செயற்பாடுகளிற்கோ இடமில்லை, இராணுவ முகாம்களிற்காகவும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களிற்காகவும் அபகரிக்கப்பட்ட நிலங்கள் மக்களிடம் மீளக் கையளிக்கப்படவில்லை, சுதந்திரமான மீன்பிடித்தலிற்கு இன்னும் அனுமதியில்லை, விவசாயத்தை அபிவிருத்தி செய்ய எவ்வித திட்டங்களும் இல்லை, சீரழிந்த நீர்ப்பாசனம் மீள சீராக்கப்படவில்லை, தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் சிறைக் கைதிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை, கைதுகள் கடத்தல்கள் நிறுத்தப்படவில்லை, சேதமடைந்த பாடசாலைகள் புனரமைக்கப்படவில்லை, பொது இடங்களிலிருந்தோ தேவையற்ற இடங்களிலிருந்தோ இராணுவம் விலக்கிக் கொள்ளப்படவில்லை, காணாமல் போனவர்கள் தொடர்பாக எந்த தகவலும் இல்லை, சிவில் நிர்வாகமோ மக்களின் வாழ்வுரிமையோ உறுதி செய்யப்படவில்லை, யுத்தம் நிறைவடைந்து நான்கு வருடங்கள் நிறைவடைய உள்ள நிலையில் இப்படியான இன்னல்களைத் தவிர வேறொன்றும் இல்லை மக்களுக்கு.

### அரசாங்கம் ஒன்றும் செய்யாமலுமில்லை

இராணுவ முகாம்கள், அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், பொருளாதார அபிவிருத்தி திட்டங்கள் என மக்களின் காணி அபகரிப்பு, ஊடக சுதந்திரத்தையும் சுதந்திரமான அரசியல் செயற்பாடுகளையும் முடக்கியமை, தென்னிலங்கை மீனவர்களை பணத்தாசைகாட்டி வடபகுதி கடற்பகுதிகளில் மீன்பிடிக்க அழைத்து வந்தமை, அவர்களை குடியேற்றியமை, சம்பந்தமே இல்லாத கிராமப்புற சிங்களவர்களையும் இராணுவம் வட - கிழக்கில் குடியேற்றியமை, வட - கிழக்குப் பகுதிகளில் புத்தர் சிலைகளையும் பௌத்த விகாரைகளையும் அளவு கணக்கின்றி அமைத்தமை, யுத்தத்தில் உயிர் நீத்தவர்களின் உறைவிடங்களையும் நினைவுச் சின்னங்களையும் அழித்தமை, இராணுவ முகாம்களை அதிகரித்தமை, கடத்தல்களையும் கைதுகளையும் தீவிரப்படுத்தியமை, தமிழ் இளைஞர் யுவதிகளின் மத்தியில் இராணுவத்தை பயன்படுத்தி கலாச்சார பண்பாட்டு சீரழிவை நடத்துகின்றமை, வட - கிழக்கில் இராணுவ ஆட்சியை பலப்படுத்தியமை என அரசாங்கம் இடைவிடாது செயற்படுகிறது.

### முரண்பாட்டிற்குள் நகர்த்தப்படும் முறைமாற்றம்

தமிழர்கள் ஆதிக்கம் செலுத்துபவர்களாக வாழும் நிலையை மாற்றி, கிடைத்ததை அனுபவித்து வாழும் இனமாக அடிமைப்படுத்துவதை நோக்காகக் கொண்ட பெரும் இராணுவ மேலாண்மையை கொண்டிருக்கும் சிங்கள பேரினவாத அரசின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும், தன் தலைவிதியை தானே தீர்மானிக்கும் உரிமை வேண்டும் என்ற சுதந்திர வேட்கையை கொண்டிருக்கும் இராணுவ அடக்குமுறைக்குள்ளாகி வழிநடத்த சரியான தலைமைத்துவம் இன்றி இருக்கும் தமிழினத்தின் அபிலாசைகளுக்கும் இடையிலான இடைவெளி, முரண்பாடுகளையும் கசப்புணர்வுகளையும் உச்சக்கட்டத்திற்கு கொண்டு சென்றிருக்கிறது. இடைவெளியை குறைத்திட அரசாங்கம் அடக்குமுறையை கையாளும் அதேவேளை தழிழர் தரப்பில் தனக்குச் சாதகமான முறையில் இடைவெளியை குறைக்கும் போராட்டம் இல்லாதிருக்கின்றது. இதற்குள் யுத்தம் காரணமாக வட - கிழக்கிலே நடைமுறைப்படுத்தப்படாமல் விடப்பட்ட முதலாளித்துவ தராளமய பொருளாதாரம் மிக வேகமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. திடீரென திணிக்கப்பட்ட தராளமய பொருளாதாரமும் நுகர்வுக் கலாச்சாரமும் மக்களின் சமூக வாழ்க்கையில் பெரும் குளறுபடிகளை ஏற்படுத்தி சுயநலத்தை வளர்த்து விட்டிருக்கின்றது. மறுபுறம் இதுவரை வட - கிழக்கிலே சுரண்டலை மேற்கொள்ள வாய்ப்பைப் பெற்றிராத ஏகாதிபத்திய நாடுகளின் பன்னாட்டுக் கம்பனிகள் தன் மூலதனத்தை கொட்டி ஒடுக்கப்பட்ட மக்களிடம் சுரண்டலை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளன.

### ஜெனிவா - மூலதனக் கண்ணீர்

தமக்கிடையே குடுமிச்சண்டை போடும் ஏகாதிபத்தியங்கள் சில வருடங்களிற்கு முன் போட்டி போட்டுக்கொண்டு தமிழினப் படுகொலைக்கு உதவி வழங்கின. உதவிகளின் பின்னால் சுரண்டலிற்கான உள்நுழைவு ஒன்றே எதிர்பார்ப்பாக இருந்தது. தமிழர்களின் மீதான எதிர்ப்போ, ஐக்கிய இலங்கை மீதான பற்றோ அல்ல. எதிர்பார்ப்பு ஈடேறாத பட்சத்தில் யுத்தக்குற்றம் என்ற கடிவாளத்தை போட்டு தன் வழிக்குக் கொண்டு வர ஏகாதிபத்தியங்கள் முயற்சிக்கின்றன. எதிர்பார்புக்களை நிறைவேற்றிக் கொண்ட சீனாவும் இந்தியாவும் பால் குடித்துக் கொண்டிருக்க, ஏமாற்றப்பட்டவர்கள் அமெரிக்கத் தலைமையில் யுத்தக் குற்றம் தொடர்பாக ஜெனிவாவில் கண்ணீர் வடிக்கின்றனர்.

### அமெரிக்க நலனிற்காக பேசுபொருளாய் ஈழத் தமிழர்கள்

விடுதலைப் புலிகள் இருந்தவரை வட - கிழக்கு பிரதேசத்தில் எந்த விதமான ஆதிக்கத்தையும் சீனாவோ, அமெரிக்காவோ, இந்தியாவோ செலுத்திட முடியவில்லை. யுத்தத்திற்கு போட்டி போட்டு உதவி வழங்கி விடுதலைப் புலிகளை அழித்திட இவர்கள் முன்னின்றதிற்கு இதுவும் ஒரு காரணம். யுத்தத்தின் பின் இந்நாடுகளின் பெரும் தனியார் நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு வட - கிழக்கில் தன் மூலதனத்தை கொட்டியமையை யாவரும் அறிவார்கள். இந்தப் போட்டியில் அமெரிக்கத் தலைமையிலான மேற்குலக நாடுகளின் நலன்கள் ஓரம் கட்டப்பட்டன. தன் நலன்களை ஓரம்கட்டிய இலங்கை அரசாங்கத்தை வழிக்கு கொண்டு வர தமிழர் நலன்களும் யுத்தக் குற்றங்களும் ஆயுதமாகப் பாவிக்கப்படுகின்றன. இலங்கை வழிக்கு வந்தால் சலசலப்புகளுடன் ஜெனிவா கூட்டம் முடிந்து விடும். வழிக்கு வராவிட்டால் மீண்டும் இவை தொடர் கதையாகும். இறுதிவரை யுத்தக் குற்றவாளிகள் தண்டிக்கப்படப் போவதில்லை. அதிகபட்சமாக மகிந்தவை பதவி கவிழ்ப்பதற்காக அவரும், அவரின் சிறு குழுவும் விசாரிக்கப்படலாம். இது அதிகபட்ச சாத்தியமான விடயம். ஆனால், அதற்கான வாயப்பை மகிந்த விட்டு வைக்கப்போவதில்லை. ஆடுற மாட்டை ஆடி கறந்துவிடுவார் அவர்.

> “சுடுகலன்களை அகற்றிவிட்டு தமிழர்களிடம் கேட்டால் உண்மைகள் வெளிவரும். சனல் 4வின் நோக்கம் எதுவாகவும் இருக்கலாம், ஆனால் அதன்பால் இருக்கும் தமிழர்களின் வேதனை உண்மையானதே.”

### மனிதாபிமானமே அற்ற மனிதாபிமான யுத்தம்

மனிதாபிமான யுத்தம் என்ற பெயரில் மகிந்தவும் அவரின் வட்டாரங்களும் நடத்திய யுத்தத்தில் மனிதாபிமானமே அற்ற முறையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமையை யாரும் மறுத்திட முடியாது. சகட்டுமேனிக்கு பொதுமக்களைக் கொன்று குவித்தமையும், எண்ணுக் கணக்கற்ற பாலியல் வன்புணர்வுகளும், சொத்தழிப்புகளும், சூறையாடலும் வார்த்தைகளால் சொல்லி முடிக்க முடியாதவை. இறுதி யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்ற, இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் விசாரணை செய்யப்பட்டு குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்படல் வேண்டும். இதனை வேறு யாரும் செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. பாதிக்கப்பட்ட நாம் தான் இதனை செய்திட வேண்டும்.

### ‘சனல் 4’ பரபரப்பு

சனல் 4 தொலைக் காட்சி இம்முறையும் “மோதல் தவிர்ப்பு வலயம்” என்ற பெயரில் தமிழர்கள் மீதான இலங்கையின் யுத்த, மனித உரிமை மீறல்களை ஆவணப் படமாக வெளியிட்டுள்ளது. இம்முறை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் மகனை இலங்கை இராணுவம் தடுத்து வைத்திருக்கும் மற்றும் கொலை செய்த படங்கள் வெளியாகி பலரையும் பேரதிர்ச்சிக்கு ஆளாக்கி இருக்கின்றது. சனல் 4வின் ஆவணப் படங்களின் உண்மைத் தன்மை தொடர்பாக இலங்கை அரசாங்கம் கேள்வி எழுப்பி தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்து வருகின்றது. சனல் 4 வெளியிட்ட காட்சிகள் இதுவரை போலியானவை என நிரூபிக்கப்படவில்லை. ஆனால், சனல் 4 வெளியிட்டவை யுத்த காலத்தில் நடந்தவற்றில் துளி அளவுங்கூட இல்லை. உண்மைகள் இதைவிட மோசமானவை என்பதே உண்மை. சுடுகலன்களை அகற்றிவிட்டு தமிழர்களிடம் கேட்டால் உண்மைகள் வெளிவரும். சனல் 4வின் நோக்கம் எதுவாகவும் இருக்கலாம், ஆனால் அதன்பால் இருக்கும் தமிழர்களின் வேதனை உண்மையானதே.

### பேரினவாதிகளிற்கு பெரும்யோகம்.

ஜெனிவாவிலே தமிழர்கள் மகிந்தவை தூக்கிலிடப் போகின்றார்கள், நாட்டைப் பிரித்து சிங்களவர்களை அழிக்கப் போகின்றார்கள் என்றெல்லாம் மிகையான போலிப் பிரச்சாரம் செய்து, சிங்கள மக்களிடம் தன் பௌத்த மேலாண்மையை நிலைநாட்டி பொருளாதார சமூக நெருக்கடிகளினால் தனக்கெதிராக சிங்கள மக்கள் திரண்டெழுவதை தடுத்து நிறுத்தி, தமிழர்களிற்கு எதிரான நடவடிக்கைகளை அவர்களை ஆதரிக்கச் செய்து தன் அதிகாரத்தை நன்கு நிலைநாட்டிக் கொண்டுள்ளது மகிந்த பேரினவாத அரசு. உள்நாட்டில் ஆதரவு இருக்கும் வரை மகிந்தவை கீழிறங்க வைக்க முடியாது. பலமிழந்து நிற்கும் எதிர்க் கட்சிகள் பெரிதாக வாய் திறக்காது. காரணம் அவர்கள் மனித உரிமை விடயத்தில் மகிந்தவிற்கு சற்றும் சளைத்தவர்கள் இல்லை. இதனை போதுமான அளவு நேர்மையாக அம்பலப்படுத்துவதற்கு பலமான இடதுசாரி இயக்கம் இன்மை என்பது பெரும் குறையாகும்.

### ஜெனிவாவில் தமிழ் தலைவர்கள்

தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் நியாயம் கோரி ஜெனிவா சென்றுள்ளனர். இவர்களின் அரசியல் போராட்டம் என்பது மக்களின் போராட்டமாக இல்லாது சர்வதேச நலன்களுடன் தமிழர் நலன்களை பொருத்திடும் செயற்பாடுகளாகவே நகர்கின்றன. இரண்டும் என்றுமே ஒரே நேர்கோட்டில் சந்திக்க முடியாதவையாகும். தமிழர் தரப்பு அரசியல் கட்சிகளின் இந்த வழிமுறை மக்களிடம் அதீதமான கற்பனைகளை வளர்த்து முடக்கும் நிலைக்கே அழைத்துச் செல்லும். தமிழ் அரசியல் கட்சிகள் தங்கள் இருப்பை தக்கவைக்க மட்டுமே பயன்படும்.


### என்ன செய்திட வேண்டும்?

ஜெனிவா கூட்டத்திற்கு சென்று இலங்கை அரசாங்கத்தின் மீது அடுக்காக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதால் ஒன்றும் நடக்கப்போவதில்லை. மாறாக தொடர்ச்சியான திட்டமிட்ட போராட்டத்தையும் அம்பலப்படுத்தல்களையும் மேற்கொள்ள வேண்டும். ஜெனிவா போன்று கிடைக்கும்

தொடர்ச்சி 15ம் பக்கம்

**மாக்சியம்-03**

# வாழ்வதற்காக உண்மையைத் தேடும் மனிதன்



உண்மை தெரிந்து கொள்வதற்காக அல்ல, உண்மையைக் கொண்டு வாழ்வதற்காகவே மனிதன் போராடுகின்றான். மனித வாழ்வை சுற்றிய நிகழ்வுகளையும், காரணங்களையும் தீர்மானிப்பது எது என்று தேடிய மனிதன், எது உண்மை என்று தேடினான்? இந்த வகையில் மார்க்ஸ் கூட இதற்கு விதிவிலக்கல்ல. இப்படித் தேடிய மார்கஸ் 1837 ஆண்டு எழுதினார் ”நான் ஆழமான உண்மையைத் தேடுகிறேன். அதைத் தெருவில் கண்டெடுக்கிறேன்” என்றார். இப்படி மார்க்ஸ் தேடிய உண்மையை இறுதியில் தெருவில் (மக்கள் மத்தியில்) இருந்தே கண்டெடுத்தார். இப்படி மார்க்ஸ் கண்டெடுத்தவைதான், சமூக விஞ்ஞானமான மார்க்சியமாகும். இப்படி மக்களின் வாழ்வில், அதன் போராட்டத்தில் இருந்து உருவான தத்துவமே மார்க்சியம் என்பதால், இது இறுக்கிப் போன கோட்பாடு அல்ல. மக்களில் இருந்து அன்னியமான வரட்டுவாதமுமல்ல. மார்க்சியம் மக்களின் வாழ்விலும், அதன் உணர்விலும் இருந்து அன்னியமான தத்துவமல்ல.

இந்த மார்க்சியம் புதிய கொள்கையாக தன்னை உருவாக்கிக் கொள்ள முன், தனக்கு முந்தைய கோட்பாடுகளை விமர்சன ரீதியாக பகுத்தாராய்ந்தது மட்டுமின்றி, சமூகத்தில் இருந்தே தன்னை புதிதாக உருவாக்கிக் கொண்டது. மார்கஸ் கூறிய போல் “....நாம் ஒரு புதியகொள்கையுடன், இதுதான் உண்மை, இதற்கு முன்னால் மண்டியிடுங்கள் என்று வறட்டுக் கோட்பாட்டுத் தனமான முறையில் உலகத்தை நோக்கிச் சொல்லவில்லை. உலகத்தின் சொந்தக் கோட்பாடுகளிலிருந்தே உலகத்தின் புதிய கொள்கைகளை உருவாக்குகிறோம்.” என்றார். மனித கற்பனைகளில் இருந்தல்ல, சமூகத்தில் நிலவிய முரண்பாடுகளில் இருந்து உருவான தத்துவம் தான் மார்க்சியம்.

இந்த மார்க்சியம் இன்று ஒரு சமூக விஞ்ஞானமாக, அனைத்தும் தளுவிய உண்மையாக இருப்பதால் மட்டும், உலகை மாற்றிவிட முடியாது. மனித வாழ்வின் முரண்களுடன், அதன் நடைமுறை போராட்டத்துடன் பின்னிப் பினைந்ததாக மார்க்சியம் இருப்பதால் மாற்றத்தைக் கோருகின்றது. சமூகம் விரும்பும் அதன் சொந்த மாற்றத்துடன் ஒருங்கினைந்து மார்க்சியம் இயங்குவதால், உலகை மாற்றிவிட போராடுகின்றது. இந்த வகையில் அதன் சொந்த நடைமுறையுடன் இணைத்து கொள்ளாத மார்க்சியமும் சரி, சமூக இயக்கத்தில் இருந்து விலகி நிற்கும் கோட்பாடுகளும் சரி, வரட்டுத்தனமானதாகவே இருக்கும். மார்க்சியம் தனித்தல்ல, சமூகத்துடன் இணைந்தே பயணிக்க முடியும்.

இந்த மார்க்சியத்தைக் நாம் கற்றுக் கொள்ளும் போது, லெனின் கூறியது போல் “அளவுக்கு மீறி எளிமைப்படுத்திக்” கற்கவும், புரிந்து கொள்ளவும் கூடாது. ஏனெனின் ”இது பொதுவாக மார்க்சியத்தை எளிமைப்படுத்துவதிலும், கொச்சைப்படுத்துவதிலும் முடியும். இது வறட்டுக் கோட்பாட்டுவதிகளை தயாரிக்கின்றது. மறுபக்கத்தில எமாற்றத்தை தோற்றுவிக்கின்றது” என்றார் லெனின். மார்க்சியத்தை அளவுக்கு மீறி எளிமைப்படுத்தி விடக் கூடாது.

> **“ மார்க்சியத்தைக் நாம் கற்றுக் கொள்ளும் போது, லெனின் கூறியது போல் 'அளவுக்கு மீறி எளிமைப்படுத்திக்" கற்கவும், புரிந்து கொள்ளவும் கூடாது ”**

வாழ்வில் எளிமையான உண்மைகள், எளிமையாக தீர்க்கப்பட முடியாத வண்ணம் சிக்கலானவை. அது முழு மனித குலத்துடன் பின்னிப்பினைந்ததாக காணப்படுகின்றது. சமூக ரீதியான முரண்பாடுகள், முழு மனித வாழ்வை மாற்றாமல் மாற்றிவிட முடியாத வண்ணம் முழுமையுடன் இணைந்து ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு இயங்குகின்றது. இதைத்தான் மார்க்சியம் முழுமையில் பேசுகின்றது.

மனித வாழ்வின் சிக்காலனதும், முழுமையானதுமான கூறுகளை, அதன் காரண காரியங்களுடன் முரணற்ற வகையில் ஒருங்கினைந்த வண்ணம் விளக்குவது தான் மார்க்சியம். இதனால் மார்க்சியத்தை எளிமைப்படுத்தி புரிந்து கொண்டு விட முடியாது. ஓரே தரத்தில், ஓரே மூச்சில் மார்க்சியத்தை கற்றுவிட முடியாது. மனித வாழ்வுடன், போராட்டத்துடன் ஒருங்கிணைந்து தான் கற்க முடியும். மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்த வண்ணம் இருப்பதால், மார்க்சியம் அதையொட்டி தன்னை மேலும் மேலும் வளர்ந்துக் கொண்டு செல்லுகின்றது. நாம் அதனுடன் இணைந்து பயணிக்கவேண்டும். எப்போது மாற்றத்துடனும், போராட்டத்துடனும் கற்பதை நிறுத்துகின்றோமோ, அப்போது மார்க்சியம் வரட்டு சூத்திரமாகிவிடும். மார்க்சியத்தை மிக எளிமைப்படுத்தி புரிந்து கொள்ளும் போது, அதை புரிந்து கொள்ளமுடியாத அவநம்பிக்கையை உருவாக்கின்றது. மார்க்சியம் முழுமை தளுவிய முரணற்ற தத்துவமாக இருப்பதால் தான், அனைவரும் இலகுவாக புரிந்துகொள்வதற்கு நடைமுறையுடன் கூடிய தொடர்ச்சியான கற்றல் அவசியமானது.

மார்க்சியம் உருப்போட்டு ஒப்பிப்பதோ, முன் கூட்டியே தயாரிக்கபட்ட ஒன்றோ அல்ல. மார்க்சியதை சமுதாய வளர்ச்சியில், சமூக இயக்கத்தில் வைத்து ஆராயவும் கற்கவும் வேண்டும். ஆக மார்க்சியத்தை எளிமைப்படுத்தி கற்கவும் கூடாது, விளங்கிக் கொள்ளவும் கூடாது. இந்த எச்சரிக்கையுடன் நாம் மார்க்சியத்தை கற்றுக்கொள்ள வேண்டும். மார்க்சியத்தை மனப்பாடம் செய்வது, புத்தக படிப்பாக மாற்றுவது, வெறும் கற்கையாக நிறுத்திக் கொள்வது, அதை மேலெழுந்தவாரியாக எளிமைப்படுத்தி புரிந்து கொள்வது, மார்க்சியத்தை கற்றுவிட்டதாக கருதுவது .... இவை எல்லாம் மார்க்சியத்தை மறுக்கும் எதிர்மறைக் கூறுகளாகவே வளர்ச்சி பெறுகின்றது. இதனால் இவை சமூகத்தில் இருந்து அன்னியப்பட்ட ”மார்க்சியமாக”, அதுவே வரட்டுவாதமாகவும் அவநம்பிகைவாதமாகவும் வெளிப்படுகின்றது.

மனிதனின் அன்றாட வாழ்வியல் கூறுகளுடன், போராட்ட கூறுகளுடன் மார்க்சியம் தன்னை ஒரு உட்கூறாக இணைத்துக் கொள்ளாத, வெறும் கோட்பாடாக மார்க்சியத்தை புரிந்துகொள்ளவும் கற்றுக் கொள்ளவும் கூடாது. மார்க்சியத்தின் பணி என்பது மனித வாழ்வியலுக்கு புரட்சிகரமாக வழிகாட்டுவது தான். மக்கள் தான் வரலாற்றை உருவக்குபவர்கள், அதற்கு உதவுவது தான் மார்க்சியம். இதற்கு வெளியில் மார்க்சியத்தை விளங்கிக் கொள்ளவும், விளக்கவும் கூடாது. மார்க்ஸ் ”லூயீ போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர்” என்ற நூலில் கூறியது போல் ”மனிதர்கள் தங்களுடைய வரலாற்றை உருவாக்குகிறார்கள். ஆனால் தங்கள் விருப்பத்திற்கேற்ப அதை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை, தாங்களே தேர்ந்தெடுக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்றபடி இல்லாமல் கடந்த காலத்திலிருந்து கைமாற்றிக் கொடுக்கப்பட்ட, தயாராயுள்ள சூழ்நிலைமைகளுக்கு, தாங்கள் நேரடியாகச் சந்திக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்பவே வரலாற்றை உருவாக்குகிறார்கள்.” என்றார். மார்க்ஸ் செய்ய விரும்பியது, அவர்கள் விருப்பப்படி உருவாக்க உதவுவது தான். இந்த வகையில் மார்க்சியம் மக்களின் விருப்பதிற்கு எற்ப, தாங்கள் தேர்தெடுக்கும் சூழ்நிலைமைக்கு எற்ப, மாற்றி அமைக்கும் வண்ணம் உதவுவதைத் தாண்டி மார்க்சியத்தை புரிந்து கொள்ளக் கூடாது. இதைத்தான் மார்க்சியம் செய்யக் கோருகின்றது. இந்த வகையில் மார்க்சியம் மக்களின் வாழ்வுடன் பின்னிப்பினைந்த ஒன்றாக, சமூக விஞ்ஞானமாக இருப்பதன் மூலம் புரட்சிகரமாக மக்களின் சொந்த வரலாற்றுக்கு வழிகாட்டுகின்றது.

எங்கெல்ஸ் கூறியது போல் ”வரலாற்றின் உந்து விசையைப் பற்றிய மாபெரும் விதியை முதன் முதலில் கண்டுபிடித்தவர் மார்க்ஸ்.” ஆக வேறு எந்த தத்துவத்தைக் காட்டினாலும் அதிகமாக மனிதகுலத்தின் விதியை நிர்ணயித்திருக்கின்ற மாபெரும் தத்துவமாக மார்க்சியம் திகழ்கின்றது. மார்க்சியத்தைக் கடந்து யாரும் புதிய உலகைப் படைக்க முடியாது. மனித வாழ்வின் எல்லா முரண் கூறுகளும், மார்க்சியத்தின எளிமையான பகுதிகளானவை. மார்க்சியம் மனித வாழ்வில் ஒருங்கினைந்த விதிகளை பற்றிய ஒரு முழுமையான முரணற்ற தத்ததுவமாகும்.

இந்த மார்க்சியம் என்ன சொல்லுகின்றது. ”எல்லாவற்றையும் சந்தேகப்படு” என்கின்றது. இது மார்க்ஸ்க்கு பிடித்த வரியும் கூட. சந்தேகப்படுவதன் மூலம் தான், கேள்வியைக் கேட்பதன் மூலம் தான், மனிதன் சுயமாக சிந்திக்கவும், சுதந்திரமாக செயற்படவும் முடியும். அதற்கான மனித ஆற்றலையும் கொடுகின்றது.

மனித எண்ணங்கள், ஆற்றல்களும் உலகம் பற்றியவை. மாாக்ஸ் கூறியது போல் “உலகாதாயத்தை மனிதனின் மனம் கிரகித்து அதனைச் சிந்தனை வடிவமாக மாற்றுவது தான் எண்ணம் ஆகும்.” என்றார். மனித எண்ணம் சிந்தனை உலகம் பற்றியது. இவை எந்த ஒரு தத்துவக் கண்ணோட்டம் இன்றி பிறப்பதில்லை. ஒரு உலகக் கண்ணோட்டமில்லாத ஒரு நபரையும் கூட, சமூகத்தில் காணமுடியாது. இது தான் உண்மை.

எண்ணம் என்பது கற்பனையானதல்ல. சமூதாயத்தில் வாழும் ஒருவர் ஆயிரக் கணக்கான நிகழ்வுகளைக் காண்கிறார். இதன் மூலம் நடக்கும் நிகழ்வுகளை ஒட்டி, தனக்கென்று சில கருத்துக்கள் உருவாக்குகின்றார். அது மட்டுமல்ல தன்னை சுற்றிய இயற்கை நிகழ்வுகளைப் பற்றியும் கூட அவருக்கு கருத்துகள் உருவாகின்றது. இதே போல் உலகம் எங்கிருந்து எப்படி தோன்றியது. மனித இனம் தோன்றியது எப்படி? இறப்பிற்கு பின் என்ன நடக்கும்? மகிழ்ச்சி, துன்பம் என்றால் என்ன? ஏன் தோன்றகின்றது. வாழ்க்கை என்றால் என்ன? இப்படி பற்பல கேள்விகள், சந்தேகங்களுடன் சிந்திக்கும் போதே, அவரை அறியாமலேயே தத்துவம் சார்ந்து தான் சிந்திக்கிறார்.

இப்படி ஒருவரின் சிந்தனை, கருத்து தத்துவயியல் சாாந்தாகவே இருக்கும். ஒருவரின் வாழ்கையை ஒட்டியதாகவே, புரிதலுக்கு உட்பட்டதாக இது வெளிப்படும். அனைவரும் உலகம் பற்றிய ஒரு தத்துவத்தைக் கடந்து வாழ்வதில்லை. தன்னை அறியாமல் தத்துவம் சார்ந்து மனிதன் வாழத்தொடங்கி விடுகின்றான்.

மார்க்சிய தத்துவம் கூட இதில் இருந்து விதிவிலக்கல்ல. மாறாக மனித வாழ்வுடன் பின்னிப்பினைந்துள்ளது. சாதரணமாக எற்படும் சந்தேகங்களும், கேள்விகளும், முரண்பட்ட தத்துவ உலகில் இருந்து தெளிவை உருவாகின்றது. இந்த வகையில் மார்க்சியம் முரணற்ற வகையில், உலகை வியாக்கியானம் செய்வதன் மூலம் மாற்றி அமைக்கவும் கோருகின்றது. மார்க்ஸ் வரியில் சொன்னால் ”உன் பணி உலகை வியாக்கியானம் செய்வதன்று - அதனை மாற்றியமைப்பது” தான் என்பதை வலியுறுத்துகின்றார்.

மனித வாழ்வை மாற்றக் கூடிய, அந்த செயலுக்குரிய அனைத்தும் தளுவிய உண்மையை, ஒரு தத்துவமாக மார்க்சியம் எப்படி தன்ளுள் வரிந்து கொண்டுள்ளது என்பதை தொடர்ந்து பார்ப்போம்.



**தொடரும்**



# சுகாதாரம் எந்தக் கடையில் கிடைக்கும்? தொழிலாளர்களுக்கு மறுக்கப்படும் சுகாதார வசதிகள்

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் கடந்த 200 வருடங்களுக்கு மேலாக பெரும்பங்காற்றும் மலையகத் தமிழ் மக்களுக்கு இன்னும் வீட்டு உரிமையோ அல்லது காணி உரிமையோ இல்லை. இதை தட்டிக்கேட்க மலையக தமிழ் மக்களின் வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்டுள்ள மந்திரிமார்களுக்கு எவ்வித திறமையோ அல்லது அறிவோ இல்லை. ஆனால், அவர்கள் ஊடகங்களிலும் கூட்டங்களிலும் சிங்கங்களைப்போல் கர்ச்சிப்பதை மட்டும் காணமுடிகின்றது. தங்களது உதிரத்தையும் வியர்வையையும் சிந்துகின்ற மக்கள் தொடர்ந்தும் இப்படிப்பட்டவர்களிடம் ஏமாந்து கொண்டே வாழ்வதா?

வெள்ளைக்கார ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்ட லயன் அறைகள் இப்போது ஓட்டை உடசல்களாக காணப்படுகின்றன. இவைகளை திருத்துவதற்கும் அல்லது புனரமைப்பதற்குமாக அமைக்கபட்ட நிறுவனங்களான மனிதவள பெருந்தோட்ட அபிவிருத்தி நிதியம் (Plantation Human Welfare Trust) மற்றும் தோட்டப் பணியாளர் வீடமைப்புக் கூட்டுறவு சங்கம் போன்றவைகள் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருகின்றன. இப்படிப்பட்ட நிறுவனங்களால் தோட்ட மக்களின் குடியிருப்பு, சுகாதாரம், சேமநலத் திட்டங்கள் போன்றவைகளை பூர்த்தி செய்ய இன்னும் ஆகக்குறைந்தது 200 வருடங்களாவது செல்லும். குடும்பத்தில் அதிகரிக்கும் அங்கத்தவர்களுக்காக லய அறைகளை சொந்த செலவில் அங்கும் இங்குமாக பெருபிப்பது அல்லது முன் அல்லது பின் பக்கமோ சிறு சிறு குடில்களை அமைப்பது சகல தோட்டங்களிலும் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றதினால் சமூக பிரச்சினைகளுக்கும் சுகாதாரத்திற்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன.

சகல தேயிலை, இறப்பர் தோட்டங்களும் மலைகளில் இருப்பதோடு அந்த மலைகளிலிருந்தே தண்ணீர் ஊற்றெடுத்து நாட்டின் பல பாகங்களுக்கும் செல்கின்ற அதே வேளை அங்கு வாழும் மக்களுக்கோ சுத்தமான போதிய குடிதண்ணீர் கிடைப்பதில்லை. மற்றொரு முக்கிய விடயம், ஆறுகள், ஓடைகள், கிணறுகளிலிருந்து கிடைக்கும் தண்ணீரையும் சுத்திகரித்து பாதுகாப்பாக வழங்கும் திட்டம் எந்த தோட்டத்திலும் இல்லை.

சகல மனிதனுக்கும் கழிவறைகள் மிகமிக அத்தியாவசியமானதாகும், ஆனால் தோட்ட மக்களில் அதிகமானவர்களுக்கு இந்த கழிவறைகள் இல்லை. இந்த மக்கள் வாழ்கின்ற அதிகமான லய கூரைகள் மா சலிக்கும் சல்லடைகள் போலிருப்பதை அவதானிக்க முடியும். ஆனால் சில தமிழ் மந்திரிமார்கள் தங்களது ஆதரவாளர்களுக்கு மட்டும் ஒரு வீட்டிற்கு ஒன்று அல்லது இரண்டு தகரங்களை வழங்குவதும் சர்வ சாதாரண விடயமாகும். இப்படி வழங்கிய தகரங்களை வாங்கியவர்கள் வேறு அலுவல்களுக்காகவே உபயோகிப்பதும் சாதாரண விடயமாகும்.

தோட்ட வைத்தியசாலைகள் வெள்ளைக்கார ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டவைகளாகும். தற்போது சுமார் 50 வைத்தியசாலைகள், 179 பிரசவ விடுதிகள், 266 மருந்தகங்கள் உள்ளதோடு அதிகமான வைத்தியசாலைகளில் வைத்தியர்களும் இல்லை மருந்துகளும் இல்லை. சில தோட்ட வைத்தியசாலைகளை அரசு பொறுப்பேறறுள்ளதோடு, அங்கும் நோயாளர்களுக்கு போதிய வசதி வாய்ப்புகள் இல்லை.

சுகாதார பாதுகாப்பு தோட்ட மக்களுக்கு போதுமானதாக இல்லை. கழிவு நீர் வசதிகள், தண்ணீர் பாதுகாப்பு, இராசயண திரவியங்கள் போன்றவைகளால் மக்களின் சுகாதாரம் பாதிப்படைவதோடு இப்படிப்பட்ட காரணிகளால் நோய்கள் பரவும் அபாயங்களும் அதிகமாக உள்ளன. குப்பை கூலங்களை அப்புறப்படுவதில் எவ்வித நடவடிக்கைகளையும் நிர்வாகங்கள் மேற்கொள்வதில்லை. டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக பொது சுகாதார பரிசோதகர்கள் தோட்டங்களுக்குச் செல்லும் போது, அங்கு காணப்படும் சுகாதார சீர்கேடுகளுக்காக வழக்குகள் பதிவு செய்வதும் தண்டனை வழங்கப்படுவதும் இங்கு வாழும் மக்களுக்கே.

அத்தோடு நோய்வாய்ப்படுபவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல போக்குவரத்து சேவைகள் மிக மிக மோசமாகவே உள்ளன. அம்புலன்ஸ் வாகனங்கள் சில தோட்டங்களில் இருந்தாலும் அவைகள் தோட்ட மக்களுக்கு கிடைப்பதில் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளன. அத்தோடு அதிகமான தோட்டப் பாதைகள் மிக நீண்ட காலமாக புனரமைக்காமலும் பாதுகாக்காமலும் உள்ளதாலும் வாகனங்கள் செல்வது மட்டுமல்ல பாடசாலைப் பிள்ளைகள், நோயாளர்கள், வயோதிபவர்கள் நடந்து செல்வதும் பெரும் சிரமமான காரியமாகும். நாட்டின பல பாகங்களில் வீதிகளை புனரமைப்பதிலும் புதிய வீதிகளை அமைப்பதிலும் அரசு பெரும் சிரத்தை காட்டுகின்ற அதே வேளை தோட்டப்பாதைகள் குன்றும் குழியுமாகவே உள்ளன.

இராசயண மற்றும் இராசயண பசளை பாவனைகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு போதிய நோய்ப்பாதுகாப்பு உடைகளோ அல்லது உபகரணங்களோ வழங்குவதில்லை. தோட்டங்களில் அங்கவீனர்கள் பலர் உள்ளனர், ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு உதவிகள் அல்லது புனர்வாழ்வு திட்டங்கள் முறையாக இல்லை.

இலங்கையில் தேயிலை, இரப்பர் போன்ற பயிர்செய்கை 23 தனியார் கம்பனிகளாலும், அரச நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம், எல்கடுவ பிலான்டேசன், மற்றும் தனியார்களுக்குச் சொந்தமான தோட்டங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற அதே வேளை அங்கு தொழில் செய்யும் ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் சேமநல பாதுகாப்பிற்கு எவ்விதமான வேளைத் திட்டங்களோ அல்லது வேறு அமைப்புகளோ இல்லை. இதனால் சகல தோட்ட மக்களும் பல்விதமான அசௌகரியங்களுக்கும் நோய்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

> **“சகல தேயிலை, இறப்பர் தோட்டங்களும் மலைகளில் இருப்பதோடு அந்த மலைகளிலிருந்தே தண்ணீர் ஊற்றெடுத்து நாட்டின் பல பாகங்களுக்கும் செல்கின்ற அதே வேளை அங்கு வாழும் மக்களுக்கோ சுத்தமான போதிய குடிதண்ணீர் கிடைப்பதில்லை”**

நகரங்கள் மற்றும் கிராமங்களில் வாழும் மக்களின் சுகாதாரம் சேம நலங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் கவனம் செலுத்துகின்றன. ஆனால் தோட்ட மக்களுக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் வாக்களிக்கவும் போட்டியிடவும் முடியுமே தவிர அந்த மன்றங்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள சில சட்டப் பிரச்சினைகள் உள்ளன. இந்த சட்டத்தை திருத்துவதற்கோ அல்லது திருத்தங்கள் கொண்டு வருவதற்கோ மலையக மந்திரிகள் எவ்வித முயற்சிகளும் மேற்கொள்வதில்லை.

ஆகையினால், தோட்ட மக்களும் இலங்கையர்கள் என்பதால் சுகாதாரம் சேமநலங்கள் சம்பந்தமாக அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதே நேரம் இந்த உரிமையைப் பெற்றுக்கொள்ள துன்பப்படுகின்ற மக்களும் சகல பேதங்களையும் மறந்து ஒன்றுபட வேண்டும். பதவிமோகங்களிலும் பணத்திலும் குறியாயிருக்கும் அரசியல்வாதிகளை நம்பி ஏமாறாமல் அவர்களை கேள்விக்குட்படுத்தி அம்பலபடுத்துவதோடு தமது பிரச்சினைகளுக்கு தாமே போராட முன்வரல் வேண்டும்.இதற்கு துணை நிற்க கூடிய சக்திகளை இனங்காண்பதும் அவசியம்.

**முத்து**

# நாட்டை நாருடிக்கும் காவிச் சாமிகளும் ஆசாமிகளும்

ஜெர்மனியில் யூதர்களை கொத்துக் கொத்தாக கொன்று குவிப்பதற்கு முன்னர் இவ்வாறான நடவடிக்கைகளில்தான் நாஜிகள் ஈடுபட்டிருந்தார்கள். இப்படியான பிரச்சாரங்கள் தான் செய்யப்பட்டன.

மதக் குரோதத்தை மனதில் நிரப்பிக் கொண்டு, சிங்கத்தின் வாளை கையிலேந்தி இலங்கைவாழ் முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்திருக்கும் காவி உடை தரித்த இனவாத சாமியார்களும் அவர்களுக்கு குற்றேவல் புரியும் ஆசாமியார்களும் பெரும்பான்மை மக்களின் இன உணர்வுகளை தூண்டும் விதத்திலான கோஷங்களை ஏந்திக் கொண்டு, ஆர்ப்பாட்டம் பேரணி என்ற பெயரில் நாட்டை இனவாத சாக்கடையில் மூழ்கடித்துக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்களுக்கு விற்கப்படும் துணிமணிகளில், இனிப்புப் பண்டங்களில் மலட்டுத்தன்மையை உண்டாக்கக் கூடிய இரசாயணப் பொருள் கலந்திருப்பதாக பிரச்சாரம் செய்யும் இவர்கள், முஸ்லிம் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாமென சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பாரிய பிரச்சாரமொன்றை மேற்கொண்டு வருகிறார்கள். முஸ்லிம் வியாபார நிலையங்களுக்கு முன்னால் உணர்வுகளைத் தூண்டும் கோஷங்களைக் கூறிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு ஒரு சமூகம் பொறுத்துக் கொண்டிருக்கிறது என்றால் அது ஆச்சரியம் தான். சிங்கள பௌத்தர்கள் மத்தியிலும், விகாரைகளிலும் பரப்பிக் கொண்டிருந்த முஸ்லிம்களுக்கெதிரான இனவாதம் இன்று பௌத்த அறநெறிப் பாடசாலைகள் வரை வியாபிக்கப்பட்டிருப்பதை காணமுடிகிறது.


அறநெறிப் பாடசாலைகளில் இன்று இனவெறி போதிக்கப்படுகிறது. நல்லறத்தையும், நன்நடத்தையையும் போதிக்க வேண்டிய மடலாயங்கள், சமூக ஒற்றுமையையும், நல்லிணக்கத்தையும் மனிதநேயத்தையும் போதிக்க வேண்டிய அறநெறிப் பாடசாலைகள் இன்று இனத்துவேசத்தையும், இனக்குரோதத்தையும் போதிக்கும் இனவெறிப்பாடசாலைகளாகவும், மதவெறிப் பாடசாலைகளாகவும் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அறத்திற்குப் பதிலாக அங்கே மறம் போதிக்கப்படுகிறது. ஒரு இனம் இன்னொரு இனத்தை எப்படியெல்லாம் வம்புக்கு இழுக்க வேண்டும், எந்த விதமான வார்த்தைப் பிரயோகங்களால், செயல்களால் அவர்களை அவமானப்படுத்த வேண்டும் என்று பிஞ்சு நெஞ்சங்களில் நஞ்சு கலக்கப்படுகிறது. பிஞ்சு வயதிலேயே ஒருவரையொருவர் முறைத்துக் கொள்ளும் நிலை உருவாக்கப்பட்டு வருகிறது.

முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்களுக்கு விற்கப்படும் துணிமணிகளில், இனிப்புப் பண்டங்களில் மலட்டுத்தன்மையை உண்டாக்கக் கூடிய இரசாயணப் பொருள் கலந்திருப்பதாக பிரச்சாரம் செய்யும் இவர்கள், முஸ்லிம் கடைகளில் பொருட்களை வாங்க வேண்டாமென சிங்கள பௌத்த மக்கள் மத்தியில் பாரிய பிரச்சாரமொன்றை மேற்கொண்டு வருகிறார்கள். முஸ்லிம் வியாபார நிலையங்களுக்கு முன்னால் உணர்வுகளைத் தூண்டும் கோஷங்களைக் கூறிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

ஜெர்மனியில் யூதர்களை கொத்துக் கொத்தாக கொன்று குவிப்பதற்கு முன்னர் இவ்வாறான நடவடிக்கைகளில்தான் நாஜிகள் ஈடுபட்டிருந்தார்கள். இப்படியான பிரச்சாரங்கள் தான் செய்யப்பட்டன. முதலாவதாக யூதர்களை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. பின்னர் யூதர்களின் பொருளாதாரத்தின் மீது கைவைக்கும் நடவடிக்கைகள் படிப்படியாக துவங்கின. இதற்காக ஜர்மன் பூராவும் இரகசியமான பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்டன. ஜெர்மனியில் குடியேறியிருந்த வெளிநாட்டினரின் வாசகால அனுமதிகள் திடீரென ரத்துச் செய்யப்பட்டு, போலந்து- ஜர்மன் கலப்பின யூதர்கள் நாட்டை விட்டு விரட்டப்பட்டனர். இவ்வாறு ஜெர்மனியிலிருந்து விரட்டப்பட்ட Hershel Grynspan என்ற யூதரால் பாரிஸில் வைத்து Ernst vom Rath என்ற ஜெர்மனியர் சுட்டுக் கொல்லப்பட்டார். நாஜிகளுக்கு இது போதாதா? நீறு பூத்த நெருப்பாக இருந்த யூதர்களுக்கு எதிரான இனவாதத் தீ கொழுந்து விட்டு எரியத் துவங்கியது. 1938 நவம்பர் 9- 10 திகதி இரவுகளில் ஜெர்மன் பூராவுமுள்ள யூதர்களுக்குச் சொந்தமான தேவாலயங்கள், வியாபார நிலையங்கள், நிறுவனங்கள், பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள் ஆகிய அனைத்து கட்டடங்களினதும் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டன. இது Crystal Night என அழைக்கப்படுகிறது. இதன் போது யூதர்களுக்குச் சொந்தமான 7000 த்திற்கும் அதிகமான கடடிடங்கள் நாஜிகளால் தரைமட்டமாக்கப்பட்டன. நாஜி போலிசார் இவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததோடு, நாஜிகளின் பிரச்சார வலையமைப்பின் ஊடாக இவை நியாயப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அதற்கு அவர்கள் கூறிய காரணம் வேடிக்கையாகவே இருந்தது. முதலாவது உலக யுத்தத்தின்போது ஜர்மனி அடைந்த படுதோல்விக்குக் காரணம் ஜெர்மனியில் வாழ்ந்த யூதர்கள் தான் என்பது.

கண்ணாடிகள் உடைக்கும் இரவில் நடந்த தாக்குதலுக்குப் பின்னர் ஜர்மனியில் வாழ்ந்த யூதர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதோடு, அவர்கள் ஜர்மன் மக்கள் சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டனர். அவர்கள் திட்டமிடப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். சிறிய பெட்டியொன்றில் எடுத்துச் செல்லக் கூடிய அளவிற்கே அவர்களது உடைமைகள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டன. நாஜி அரசாங்கமும், யூதர் அல்லாதவர்களும் அவர்களது சொத்துக்களை அபகரித்து கொண்டனர். இந்த நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் ஹிட்லரின் ஊதுகுழலான கொபெல்ஸ், மேற்படி நடவடிக்கைகள் தமது கட்சியால் மேற்கொள்ளப்பட்டவையல்லவென்றும், எப்படியிருந்தாலும் ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமையை தடுக்க முடியாதெனவும் கூறினார். வெளிநாட்டுப் பிரஜைகள் மீதோ, யூதர்கள் அல்லாதவர்கள் மீதே, அவர்களது சொத்துக்களுக்கோ எவ்வித சேதமும் விளைவிக்கக் கூடாதென நாஜிப் படைகள் அறிவுறுத்தப்படுத்தப்பட்டிருந்தன. பெருந்தொகையான யூதர்கள் கைது செய்யப்பட்டதோடு, ஆயிரக்கணக்கான யூதர்கள் கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். மேற்படி சம்பவங்களை நன்றாக ஆராய்ந்து பார்த்தால் உணர்வுகளைத் தூண்டக் கூடிய வாசகங்களால் கோபமுற்ற ஒரு யூதர் செய்த கொலை ஜர்மனியில் வாழ்ந்த ஒட்டு மொத்த யூதர்களுக்குமே பேரழிவைக் கொண்டு தந்தது. புகைந்து கொண்டிருந்த இனவாதத் தீ ஒரு கொலையோடு கொழுந்து விட்டெரியத் துவங்கியது.

இந்நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் இப்படியான ஒரு பேரழிவை ஏற்படுத்துவதற்காகத்தான் பொது பல சேனா போன்ற இனவாத அமைப்புகள் மும்முரமாக செயற்பட்டு வருவது தெரிகிறது. பல்வேறு இனவாதக் கோஷங்களை முன்வைத்து முஸ்லிம்களின் உணர்வுகளை தூண்டி இன்னொரு இனவாத அழிவிற்குள் நாட்டை இழுத்துச் செல்ல இந்த அமைப்புகள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றன. சமீபத்தில் மாத்தறை திக்குவலையில் மூன்று முஸ்லிம் யுவதிகள் தமது கலாச்சார உடையில் நடைபாதையில் சென்று கொண்டிருந்தபோது இனவாதக் காடையர்கள் அவர்களது ஆடைகளை இழுத்து வம்புக்கிழுத்தனர். அதனை சுற்றி நின்றோர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றனர். இந்தச் சம்பவத்தைப் பார்க்கும்போது “நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மாந்தரை நினைக்கும்போது என்ற பாரதியின் பாடல்தான் நினைவிற்கு வருகிறது.இந்த நிலையிலும் முஸ்லிம்கள் பொறுமை காத்தது நாட்டின் நலன் கருதியாகத்தான் இருக்க வேண்டும். அநீதிகளும் அக்கிரமங்களும் எங்கு நடந்தாலும் அதனைத் தட்டிக் கேட்கும் நாள் வரவேண்டும். அநீதிக்கெதிராக மக்கள் ஒன்றுபட்டு குரல் கொடுக்க வேண்டும். அப்போதுதான் எல்லா அடக்குமுறைகளும், எல்லா ஒடுக்குமுறைகளும் முடிவு கட்டப்படும். நாட்டில் ஆயிரக்கணக்கான பிரச்சினைகள் இருக்கின்றன. வாழ்க்கைச் செலவு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமிருக்கின்றது. உழைக்கும் வர்க்கம் சாப்பாட்டிற்கே ததிக்கி நத்தோம் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறது. பச்சிளம் பாலகிகள் கூட காமப் பேய்களினால் மட்டுமல்ல காவிகளினாலும் கற்பழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பாலியல் வக்கிரங்கள் நாள்தோறும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இவை அவர்களின் குற்றமா? அல்லது இந்த முறையின் குற்றமா? என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.



மேற்கத்திய கலாச்சார சீரழிவிற்குள் சிக்கி இளைய சமுதாயம் நாசமாகிக் கொண்டிருக்கின்றது. நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம். உழைப்பாளிக்கு ஒழுங்கான ஊதியம் கிடைப்பதில்லை. இவற்றுக்கெல்லாம் தீர்வு கிடையாத ஆளும் வர்க்கம் தனது ஆசீர்வாதத்தோடு தூண்டிவிட்ட இனவாதம் இன்று தனது கட்டுப்பாட்டையும் மீறி சென்று கொண்டிருப்பதை தடுக்க முடியாத தனது கையாலாகாத்தனத்தை மேடையேற்றிக் கொண்டிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. நவதாராளமய முதலாளித்துவத்தின் எஜமானியத்தோடு ஆட்சிக்கட்டில் அமர்ந்து கொண்டு பொருளாதார நெருக்கடிக்கு தாக்கு பிடிக்க முடியாமல் விழிபிதுங்கிக் கொண்டிருக்கும் ராஜபக்ஸ அரசாங்கம் தான் தூ ண்டிவிட்ட இனவாதத்தை கட்டுப்படுத்த முடியாமல் பிதற்றிக் கொண்டிருப்பது ஆசியாவின் ஆச்சரியம்தான்.



# வட-கிழக்கில் பெண்கள் ஆயுதமேந்தியமை முன்னேற்றமான நிலைமைகளை உருவாக்கியது

**சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பின் தலைவி தோழி திமுது ஆட்டிகல**

**வடக்கு-கிழக்கில் பெண்கள் போராளி குழுக்களில் இணைந்து ஆயுதமேந்தி வீரத்துடன் ஆண்களுக்கு நிகராக ஆண்களுடனே மோதி இருந்தார்கள். இந்நிலைமை சமூகத்தில் பெண்கள் தொடர்பான முன்னேற்றமான நிலைமைகளை உருவாக்கியிருந்தமை குறிப்பிடதக்கது. ஆனால், அவர்கள் மீதும் இன்று அதிகமான அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. அவர்கள் யுத்தத்தின் போது கீழ்த்தரமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இன்றும் அவர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்கின்றன. அண்மையில் வன்னிப்பிரதேசத்தில் இராணுவத்திற்கு பலவந்தமாக பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக செய்திகள் வெளியாகின. வடக்கு-கிழக்கில் நடைபெறுபவற்றில் பெருமளவிலானவை வெளியுலகிற்கு தெரிய வருவதில்லை என சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பின் தலைவி திமுது ஆட்டிகல தெரிவித்தார். போராட்டம் பத்திரிக்கைகாக திமுது ஆட்டிகல வழங்கிய பிரத்தியேக செவ்வியின் போதே மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார். அவர் வழங்கிய செவ்வியின் முழுவிபரம் பின்வருகிறது.**

**போராட்டம்- சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பு பெண்களின் உரிமைகள் என்பதினை எவ்வாறான நிலையில் இனங்காண்கிறது?**

தோழி திமுது- பெண்களை இடதுசாரி இயக்கத்தினுள் ஒன்றிணைக்கும் நோக்கத்துடனேயே சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பு கட்டியெழுப்பப்பட்டது. பெண்கள் கொடுமையான சமத்துவமின்மையை எதிர் நோக்குகின்றார்கள். கடுமையான ஒடுக்கு முறைக்கு இலக்காகின்றார்கள். நாட்டில் பல பெண்கள் அமைப்புக்கள் செயற்படுகின்றன. ஆனால் பெண்களின் பிரச்சினைகளின் அடிப்படைக் காரணத்தை அறிந்திடாமல் செய்படுவதினால் பலனேதும் இல்லை. அதன் காரணமாக தான் அநேக பெண் இயக்கங்கள் பெண்கள் எதிர்நோக்கும் சமத்துவமின்மைக்கும் அநீதிக்கும் எதிரான போராட்டத்தை ஆண்களிற்கு எதிரான போராட்டமாக நடத்துகின்றனர்.

**போராட்டம்- அப்படியானால் பெண்கள் எதிர்நோக்கும் ஒடுக்கு முறையினதும் சமத்துவமின்மையினதும் அடிப்படை காரணம் என்ன?**

தோழி திமுது- பெண்களின் பிரச்சினைகளின் அடிப்படை சமூக முறைமைக்குள் தான் இருக்கின்றது. சமூக முறைமைக்குள் இருந்து தான் பிரச்சினைகள் உருவெடுக்கின்றன. எனினும் முதலாளித்துவத்திற்குள்

> **“பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் பெண்களின் இயல்பு இதுதான் என்பதே முழுச் சமூகத்தின் சிந்தனையாகும்”**

தற்போதைய நிலைமையை விட இன்னும் அதிகமான உரிமைகளும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என நாம் நம்புகின்றோம்.

**போராட்டம்- முதலாளித்துவத்திற்கு எதிராக அமைப்பு ரீதியாக ஒன்றிணையும் நீங்கள் எவ்வாறு முதலாளித்துவத்திற்குள் பெண்களின் உரிமைகள் தொடர்பாக எதிர்பார்ப்புக்களை கொண்டு இருக்கின்றீர்கள்?**

தோழி திமுது- முதலாளித்துவத்திற்குள் பெண்களுக்கு விடுதலை கிடைக்குமென நாம் நம்பவில்லை. அது ஒரு போதும் நடக்காத விடயம். ஆகவே பெண்களின் சுதந்திரத்தை உறுதி செய்திட வேண்டும் எனின், சமூக முறைய மாற்றியமைத்திட வேண்டும். அதற்காக பெண்களை தெளிவுபடுத்தும் நிறுவன மயப்படுத்தும் இயக்கம் என்ற வகையில் தான் எமது போராட்ட பாதையை நாம் நெறிப்படுத்தி இருக்கின்றோம். அதற்கும் மேலாக நாம் செய்ய வேண்டியவைகளும் இருக்கின்றது. ஆனாலும் சமூக முறைய மாற்றியமைத்திடும் வரை பெண்களை அடிபணிந்திருங்கள் என்று கூற முடியாது. ஆகவே இந்த முறைக்குள்ளிருந்தே நாம் உரிமைக்காக போராடிட வேண்டும். ஆனால் இதனை சமூக முறைமையை மாற்றி அமைப்பதன் மூலமே யதார்த்தமாக்கிட முடியும்.

**போராட்டம் -இலங்கையில் பெண்கள் இச் சவாலை எவ்வாறு எதிர்கொள்கின்றார்கள் ?**

தோழி திமுது - உண்மையில் பெண்கள் தனக்கு பிரச்சினை இருக்கின்றது என்று உணராமையும் ஏற்று கொள்ளாமையுமே பிரதான சிக்கலாகும். நாம் ஒரு பெண்கள் இயக்கம் அல்லது சமூக அமைப்பு என்ற வகையில் “உங்களுக்கு பிரச்சினை இருக்கின்றது, சமத்துவம் இல்லை, ஒடுக்கப்படுகின்றீர்கள்” என கூறும் போது அநேகமான பெண்கள் அவர்களின் பிரச்சனைகளை கடமையாகவும் பொறுப்பாகவும் நோக்க பழகி இருக்கின்றார்கள். ஆகவே பெண்கள் தனக்கு எதிரான ஒடுக்குமுறையை பிரச்சினையாக பார்ப்பதில்லை. பெண்ணாக பிறந்ததினால் இவற்றை சுமந்துதானாக வேண்டும் என நினைக்கின்றார்கள். இவ்வாறு பிரச்சினை இருக்கிறது என்பதனையும் அறியாத ஏற்றுக் கொள்ளாத நிலையிலிருப்பவர்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என கதைப்பதே சிக்கலான விடயமாகும்.

**போராட்டம் -இதற்கான தீர்வை தேட பெண்கள் மட்டும் தான் செயற்பட வேண்டுமா?**

தோழி திமுது - முழு சமூகமும் பெண்களுக்கு பிரச்சினை இருக்கின்றது என ஏற்று கொள்ளவில்லை. பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் பெண்களின் இயல்பு இதுதான் என்பதே முழுச் சமூகத்தின் சிந்தனையாகும். இப்படியான சமூகத்திற்குள் தான் பெண்களின் உரிமைகள் தொடர்பாக குரல் எழுப்ப வேண்டி உள்ளது. பிரச்சினை இருக்கும் இடத்தில் உரிமைக்காக போராடுவதை விட பிரச்சினை இல்லை என நினைத்துக் கொண்டிருப்பவர்களுடன் இணைந்து போராடி அவர்களை நிறுவனமயப்படுத்துவது பிரதான சவாலாகும். அந்த சவாலை நாம் எவ்வித சமரசமும் செய்யாமல் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம்.

**போராட்டம் - மத்திய கிழக்கு நாடுகளுடன் ஒப்பிடும் போது எம் நாட்டில் பெண்களுக்கு பாரதூரமான பிரச்சனைகள் பெண்கள் மீதான கடுமையான ஒடுக்கு முறைகள் இல்லை என்று குறிப்பிடலாம் அல்லவா?**

தோழி திமுது - மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடும் போது கிழக்குலக நாடுகளில் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறை அதிகம் என்றும் ஆசிய நாடுகலுடன் ஒப்பிடுகையில் மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் அதிகம் எனவும் யார் ஒருவராலும் கூறிட முடியும். இவ்வாறு சிந்திக்காமல் பெண்களுக்கு கிடைக்க வேண்டிய சுதந்திரம், உரிமைகள், சமூக அந்தஸ்து என்னவென்றுதான் சிந்திக்க வேண்டும். அவ்வாறு நோக்கும் போது தான் பெண்களுக்கு பிரச்சனை இருக்கின்றது என்பது புரியும்.

**போராட்டம் -இதில் ஆண்களின் பங்கு என்னதாக இருக்க வேண்டும்?**

தோழி திமுது - உண்மையில் ஆண்களுக்கு பெரிய பங்கு இருக்கின்றது. பெண்களின் பிரச்சனைகள் பெண் என்ற வட்டத்திற்குள் மட்டும் வரையருக்கப்பட்டது அல்ல. பெண்களால் மட்டும் அந்த பிரச்னையை தீர்க்க முடியாது. இது முழு சமூகத்தின் பிரச்சனையாகும். சமூக நிலையை மாற்றிடாமல் ஆண்களின் நிலைமையை மாற்றிடாமல் பெண்களின் பிரச்சனைகளை தீர்த்திட முடியாது. நாம் அதனை தெளிவாக விளங்கியிருக்கின்றோம். சுதந்திரத்திற்கான மகளிர் அமைப்பின் நிறைவேற்று குழுவில் பல ஆண்களும் உறுப்பினர்களாக உள்ளனர். எமது அமைப்பின் செயற்பாட்டாளர்களாகவும் பல ஆண்கள் செயற்படுகின்றனர்.

**போராட்டம் - பெண்களின் உரிமைகள் தொடர்பில் ஏனைய பெண்கள் அமைப்பினதும் அரசியல் கட்சிகளினதும் செயற்பாடுகள் எவ்வாறானதாக உள்ளன?**

தோழி திமுது - பல பெண்ணிய இயக்கங்கள் ஆணாதிக்கத்திற்கு எதிரான போராட்டங்களை நடத்திக்கொண்டிருகின்றன. பெண்கள் இயக்கங்கள் ஒவ்வொன்றினதும் நோக்கங்கள் வெவ்வேறானவை. அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரனையில் இயங்கும் பெண்கள் இயக்கங்கள் உண்மையாக பெண்கள் பிரச்சனைகளுக்கு ஆதரவாக குரல் கொடுக்கின்றதா என்பது சந்தேகம் தான். ஒரு சில வழிகளில் குரல் எழுப்பிவிட்டு பணம் தேடும் வேலையை

> சவாலான விடயத்தை சவாலாக ஏற்று கொண்டு செயற்படாமல் வழமையான ஆர்ப்பாட்டங்கள் ஊடக நேருரைகள் நடத்துவதினால் பிரச்சனைகள் தீரப் போவதில்லை. பெண்களின் பிரச்சினைகளை விளங்கி கொள்ளும் நிலைக்கு அவர்களை கொண்டு வரல் வேண்டும். அதனோடு இணைந்ததாக தான் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடத்த வேண்டும். அதனூடாகத்தான் பெண்களின் பிரச்சினைகள் தொடர்பான சமூக கவனத்தை ஈர்க்கலாம்.

> வடக்கு கிழக்கில் பெண்கள் மிக அவலமான ஒடுக்குமுறைக்கும் சீரழிவிற்கும் ஆளாகி உள்ளார்கள்.

தான் அவைகள் செய்கின்றன. அவை ஆண்களின் மேலாண்மையை வரிந்து கட்டி கொண்டு செயற்படுபவை. அரசியல் கட்சிகள் தேர்தலில் வெற்றி பெறுவதை நோக்காக கொண்டவை. இவை இரண்டும் பெண்களின் உரிமைகளிற்காக குரல் கொடுப்பதில்லை. ஆகவே தான் இடதுசாரி இயக்கத்தினுள் பெண்கள் நிறுவன மயப்பட வேண்டும் என சொல்கின்றோம்.

**போராட்டம் - இடது சாரி இயக்கத்தினுள் பெண்களை நிறுவனமயபடுத்துவதன் முக்கியத்துவம் என்ன?**

தோழி திமுது -இவ்விடத்தில் "பெண்களின் உண்மையான பிரச்சனை என்ன? அதற்கான தீர்வு என்ன?" என்ற கேள்வி எழுகின்றது. இதற்கான விளக்கத்தையும் தெளிவு படுத்தல்களையும் வழங்கி நிறுவனமயபடுத்துவதற்கு இடதுசாரி இயக்கத்தினால் தான் முடியும். இது சவாலான விடயமாகும். இந்த சவாலான விடயத்தை சவாலாக ஏற்று கொண்டு செயற்படாமல் வழமையான ஆர்பாட்டங்கள் ஊடக நேருரைகள் நடத்துவதினால் பிரச்சனைகள் தீர போவதில்லை. பெண்களின் பிரச்சனைகளை விளங்கி கொள்ளும் நிலைக்கு அவர்களை கொண்டு வரல் வேண்டும். அதனோடு இணைந்ததாக தான் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்கள் நடத்த வேண்டும். அதனூடாக தான் பெண்களின் பிரச்சனைகள் தொடர்பான சமூக கவனத்தை ஈர்க்கலாம்.

> நாம் ஒரு பெண்கள் இயக்கம் அல்லது சமூக அமைப்பு என்ற வகையில் உங்களுக்கு பிரச்சினை இருக்கின்றது, சமத்துவம் இல்லை, ஒடுக்கப்படுகின்றீர்கள்" என கூறும் போது அநேகமான பெண்கள் அவர்களின் பிரச்சனைகளை கடமையாகவும் பொறுப்பாகவும் நோக்க பழகி இருக்கின்றார்கள்.

**போராட்டம் - பெண்கள் தொடர்பாக கதைக்கும் போது வர்த்தக சந்தையை தவிர்த்து விட முடியாது. வர்த்தக சந்தையையும் பெண்களின் வாழ்வியல் கோலங்களையும் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

தோழி திமுது - புதிய தாராளமயவாதம் பெண்களை பாலியல்போக மற்றும் விற்பனை பண்டமாக்கியுள்ளது. இதன்காரணமாக பெண்கள் மீது ஒடுக்குமுறை நிலவுகிறது என்பதினை மூடி மறைத்திட முடியும். இது மிக ஆபத்தான நிலையாகும். ஊடகங்களில் பெண்கள் அரை நிர்வாணமாக காட்டப்படும் போது தான் ஒடுக்கப்படுகின்றோம் தனக்கு பிரச்சனை இருக்கின்றது என்பது தெரிவதில்லை. தொலைகாட்சி விளம்பரங்கள் , தொடர் நாடகங்களை பார்க்கும் போது பெண்களுக்கு பிரச்சனை இல்லை அவர்களின் வாழ்க்கை மிக ரம்மியமாக உள்ளது என்றே தோன்றும். ஆனால் இதனுள் மிலேச்சதனமான சுரண்டலே காணப்படுகிறது. இன்று எந்த ஒரு பண்டத்தையும் பெண்கள் இல்லாமல் விற்பனை செய்திட முடியாது. அதே போல் தான் உற்பத்தியிலும் பெண்களின் உழைப்பு சுரண்டப்படுகின்றது. பொருளாதரத்தை பார்த்தோமானால் பெரும் பங்களிப்பு செய்வது பெண்களாவர். ஆடை தொழிற்துறை, வெளிநாட்டு பனி பெண்கள் தேயிலை தோட்டங்கள் என இவை எல்லாம் பெண்களின் உழைப்பினால் இயங்குபவை. ஆனால் இங்கெல்லாம் பெண்கள் மனிதநேயமற்ற முறையில் நடத்த படுகின்றனர்.

**போராட்டம் - வெளிநாடுகளிற்கு பெண்களை அடிமைகளைப் போல் பணிப்பெண்களாக அனுப்புகின்றமை தொடர்பான உங்கள் கருத்து என்ன?**

தோழி திமுது - வெளிநாடுகளிற்கு பணிபெண்களாக செல்லும் பெண்கள் கடல் கடந்த தேசங்களில் தனித்து விடப்பட்ட நிலையில் பெரும் இன்னல்களையும், கொடுமைகளையும் அனுபவித்து வருகின்றனர். இவர்களின் உழைப்பின் பலனை அனுபவிக்கும் அரசாங்கம் இவர்கள் தொடர்பாக எவ்வித அக்கறையும் கொள்வதில்லை. இதற்கு மிக அண்மைய உதாரணம் தான் ரீசானா நபீக்யின் விவகாரம். அரசாங்கத்திற்கு உண்மையான அக்கறை இருந்திருக்குமாயின், முறையான முயற்சி செய்யப்பட்டிருக்குமாயின் ரீசானா நபீக்கை காப்பாற்றி இருக்கலாம். இன்று பலர் பெண்கள் வெளிநாடுகளுக்கு பணிபெண்களாக செல்ல கூடாது என்னு கூறிவருகின்றனர். ரீசானா நபீக்கின் விவகாரத்திற்கு பின் அரசாங்கம் வெளிநாட்டிற்கு பணிபெண்களை அனுப்புவதை தற்காலிகமாக இடைநிறுத்தியது. இவ்வாறு செய்வதினால் பிரச்சினை தீர போவதில்லை. வெளிநாட்டிற்கு பெண்கள் செல்வதை நிறுத்த முடியாது. முதலாளித்துவத்தினால் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியும், பொருளாதார தேவைகளுமே வெளிநாட்டிற்கு செல்ல காரணம். பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்படாத வரை பெண்கள் வெளிநாடுகளிற்கு செல்வதை தவிர்க்க முடியாது. ஆனால், வெளிநாடுகளில் பணிபெண்களாக பணிபுரியும் பெண்களின் நலன்களும் உரிமைகளும் உறுதிசெய்யப்படல் வேண்டும்.

**போராட்டம் - நீங்கள் குறிப்பிடுவதை போல் நிலைமை பாரதூரமானதாக இருபினும் பெண்கள் இயக்கங்களை தவிர்ந்த ஏனைய பெண்கள் இதற்கு எதிராக குரல் எழுப்புவதாக தெரியவில்லை?**

தோழி திமுது - அது தான் இங்கிருக்கும் பிரச்சனை. உண்மை மறைக்கப்பட்டு போலிகள் காண்பிக்கப்படுகின்றன. இதனை வர்த்தக சந்தை மிக நுணுக்கமாக செய்கிறது. அதனால் தான் பெண்கள் தனக்கு பிரச்சனை இருக்கிறது என்பதனை உணர முடியாதவர்களாக இருக்கின்றனர். ஆகவே பெண்களை தெளிவான நிலைக்கு அழைத்து செல்ல வேண்டும். மாயகனவுலகில் வாழும் அவர்களை அதிலிருந்து வெளியே அழைத்து வர வேண்டும்.

**போராட்டம் - யுத்தத்தின் பிந்தைய சூழலில் வாழும் பெண்கள் விசேடமான பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் அல்லவா?**

தோழி திமுது - வடக்கு கிழக்கில் பெண்கள் மிக அவலமான ஒடுக்குமுறைக்கும் சீரழிவிற்கும் ஆளாகி உள்ளார்கள். யுத்தம் முடிந்து 4 வருடங்கள் ஆகின்ற நிலையிலும் அதிகமானோர் இன்னும் இடம் பெயர்ந்த நிலையிலேயே வாழ்கின்றனர். இவர்களில் அதிகமானோர் கணவரை இழந்த குடும்ப தலைவிகள். இல்லா விடின் தந்தை சகோதரர்களை இழந்தவர்கள். ஆகவே பெண்கள் தான் அனைத்தையும் எதிர்நோக்குகின்றார்கள். ஆனால் அவர்களுக்கு சமூக பாதுகாப்பு இல்லை அதே போல் பொருளாதார உத்தரவும் இல்லை. ஆசியாவின் புதுமை, வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் தொடர்பாக கதைத்தாலும், சமூகத்தினுள் எப்படியான நிலை காணப்படுகிறது என்பதை பெண்களின் வாழ்கையை எடுத்து நோக்கினோமானால் தெரியும். நாம் வடக்கு கிழக்கில் செயற்படுவது போதுமானதல்ல. அது தொடர்பாக விசேட கவனம் எடுக்க வேண்டும். பெண்கள் தினம் தோறும் பாலியல் கொடுமைக்கு ஆளாகின்றார்கள். மனித உரிமைகள் மதிக்கப்படும் நிலைமையும் இல்லை. கடந்த காலங்களில் வடக்கில் நாம் மேற்கொண்ட செயற்பாடுகளின் போது அதனை அறிந்தோம். வடக்கில் மக்களுக்கு மட்டுமல்ல, அங்கு சென்று உண்மையாக குரலெழுப்பும் கொழும்பை தளமாக கொண்ட அமைப்புகள் மீதும் ஒடுக்குமுறை மேற்கொள்ளப்படுகிறது. எல்லா பக்கத்திலும் சமமின்மையும் ஒடுக்கு முறையும் தான். அநேகமானோருக்கு யுத்தத்தின் போது தன் சொந்தங்களுக்கு என்ன நேர்ந்தது என்றே தெரியாது. எல்லாவற்றிற்கும் மேலாக அடக்குமுறையும் அநீதியும் நிலவுகிறது.



**போராட்டம் - வட-கிழக்கை பொறுத்தவரை யுத்தம் நிலவிய காலங்களில் பெண்கள் ஆயுதமேந்தி போராடியமையும் போராளிகளாக இருந்தமையும் நாட்டின் ஏனைய பகுதி பெண்களை விட வேறுப்பட்ட நிலையை தோற்றுவித்தது அல்லவா?**

தோழி திமுது - ஆம், வட-கிழக்கில் பெண்கள் போராளி குழுக்களில் இணைந்து ஆயுதமேந்தி வீரத்துடன் ஆண்களுக்கு நிகராக ஆண்களுடனே மோதி இருந்தார்கள். இந்நிலைமை சமூகத்தில் பெண்கள் தொடர்பான முன்னேற்றமான நிலைமைகளை உருவாக்கியிருந்தமை குறிப்பிடதக்கது. ஆனால், அவர்கள் மீதும் இன்று அதிகமான அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. அவர்கள் யுத்ததின் போது கீழ்தரமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டனர். இன்றும் அவர்கள் மீதான அடக்குமுறைகள் தொடர்கின்றன. அண்மையில் வன்னிப்பிரதேசத்தில் இராணுவத்திற்கு பலவந்தமாக பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதாக செய்திகள் வெளியாகின. வட-கிழக்கில் நடைபெறுபவற்றில் பெருமளவிளானவை வெளியுலகிற்கு தெரிய வருவதில்லை.

**போராட்டம் -இம்முறை மகளிர் தினத்தில் நீங்கள் அன்பு மலரும் சமூகம் என்ற தொனிப் பொருளில் நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளமைக்கான. காரணம் என்ன?**

தோழி திமுது - அன்பு மலரும் சமூகம் என கூறும் போது எல்லோருக்கும் நினைவிற்கு வருவது முதலாளிதுவத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் காதலர் தினம் அல்லது உடல் இச்சைக்கான காதல் தான். உண்மையில் அன்பு என்பது மனித நேயத்தை அடிப்படையாக கொண்ட சமூக செயற்பாடாகும். தற்போது மனிதநேயத்தை இழந்த சமூகத்தினுள் பெண்கள் தினம்தோறும் வன்முறைக்கு பலிக்கடாவாகினறனர். மனித நேயமுடைய சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும் அங்குதான் மிலேச்ச தனத்திற்கு விடை கிடைக்கும். அதனை அடிப்படையாக கொண்டே "அன்பு மலரும் சமூகம்" என்ற தொனிபொருளில் மகளிர் தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளோம்.

**போராட்டம் - நீங்கள் குறிப்பிடுவது போல் மனிதநேயமற்ற சமூகத்தினுள் இதனை யாதார்த்தமாக்கி கொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றதா?**

தோழி திமுது -இந்த சமூகத்தினுள் அது தொடர்பான ஆரம்ப கருத்தியலை தான் உருவாக்க முடியும். ஏனென்றால் இந்த சமூக முறைமைக்குள் பெண்களின் உண்மையான பிரச்சனைகளுக்கு விடை கிடைக்காது. அதற்காக சமூக முறைமையில் மாற்றம் அவசியம். சமவுடமை சமூகத்தில் தான் அன்பு பிறக்கும் சமூகத்தை உருவாக்கிட முடியும். தெளிவுபடுத்தல்கள், விவாதங்கள். கருத்தாக்கங்கள் தான் தற்போது ஆரம்பிக்கப்பட வேண்டியவை.

# உலகப் பொருளாதார நெருக்கடி

ஒருவன் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமென்றால், மற்றவன் இழப்பதன் மூலம் துன்பத்தை அனுபவித்தாக வேண்டும். மற்றவனுடைய செல்வத்தை அனுபவிப்பது தான் மகிழ்ச்சி. இதுதான் இந்த தனியுடமை சமூக அமைப்பின் அறம் மற்றும் கோட்பாடாகும். இதை அமெரிக்க அரசின் முன்னைய முக்கிய கொள்கை வகுப்பாளரும், முக்கிய மந்திரியுமாக இருந்த கொலின் பாவெல் நறுக்குத் தெறித்தது போல் மிக எடுப்பாகவே கூறியிருந்தார். ”தனிச் சொத்துரிமையை மதிப்பது மனித கௌரவத்தின் அடையாளம் இதில் சமரசம் செய்து கொள்வது கூடாது. சுதந்திரச் சந்தையும், சுதந்திர வாணிபமும் நமது தேசியப் பாதுகாப்புத் திட்டத்தில் முன்னுரிமை பெறுகின்றது” என்றார். தனியுடமைச் சமூக அமைப்பு இதைத் தாண்டி மனிதனை மனிதனாக மதிக்காது. இந்தத் தனியுடமை சார்ந்த பொருள் உலகில், மனிதன் தானும் ஒரு உயிருள்ள சடப்பொருளாக மாற்றப்பட்டு விடுகின்றான். இந்த சமூக அமைப்பில் ஏற்படும் அதிர்வுகளில் ஒன்றுதான் உலகப் பொருளாதார நெருக்கடி.

இதன் போது வேலை இழந்துவிடும் நிலை, சம்பளக் குறைப்பு, அதிக வேலைப்பளு, சமூக நலத் திட்டங்கள் வெட்டு, தொழிலாளர் உரிமைகள் பறிப்பு, வாழ்க்கைத் தரத்தில் வீழ்ச்சி, விலைகள் அதிகரித்தல் ... என்று அடுக்கடுக்காக சாதாரண மக்கள், உலகப் பொருளாதார நெருக்கடியை தங்கள் சொந்த வாழ்வுடன் உணரத் தொடங்குகின்றனர். இது ஏன் நிகழ்கின்றது? பொருளாதார நெருக்கடி என்கின்றார்களே அது என்ன? இவை எதையும் பொது மக்கள் தெரிந்து கொள்ள முடிவதில்லை. தங்கள் சொந்த வாழ்வுடன் உணரும் இந்த நெருக்கடியை, ஏன் நிகழ்கின்றது என்று, உணர்வுபூர்வமாக உணர்ந்தால் மட்டும் தான் இதற்கு தீர்வையும் மனிதன் காணமுடியும்.

மூலதனம் என்பது என்ன? அதை மார்க்ஸ் மிக அழகாக எங்கெல்ஸ்சுக்கு எழுதிய கடிதத்தில் “ஒரு துண்டுச் சதை, ஒரு நரம்பு, ஒருதுளி இரத்தம் இருக்கும் வரை கதையில் வருகின்ற உயிருள்ள மனிதனின் இரத்தத்தை உறியும் பணம் போன்று, மூலதனமானது அவனை முழுதும் சுரண்டாமல் அவன்மீது தான் கொண்ட பிடிப்பைத் தளர்த்தாது” என்றார். மூலதனத்தின் குணம் இதுதான். இந்த மூலதனத்தை குவிக்கும் போட்டி மூலதனத்துக்கு இடையில் கூர்மையாகின்ற போது, அது உலகப் பொருளாதார நெருக்கடியாக மாறுகின்றது.

உலகப் பொருளாதார நெருக்கடி என்பது என்ன? மூலதனத்தின் சொந்த நெருக்கடி. அதாவது முதலீட்டைப் போட்ட முதலாளி, பணத்தை பெருக்க நடத்தும் போட்டியினால் ஏற்படும் பொது நெருக்கடி. போட்ட மூலதனத்திற்கு இலாப விகிதம் குறைகின்ற போதும், இலாபத்தை பெருக்கும் போது ஏற்படும் பொது

> **மற்றவனுடைய செல்வத்தை அனுபவிப்பது தான் மகிழ்ச்சி. இதுதான் இந்த தனியுடமை சமூக அமைப்பின் அறம் மற்றும் கோட்பாடாகும். இதை அமெரிக்க அரசின் முன்னைய முக்கிய கொள்கை வகுப்பாளரும், முக்கிய மந்திரியுமாக இருந்த கொலின் பாவெல் நறுக்குத் தெறித்தது போல் மிக எடுப்பாகவே கூறியிருந்தார்.**

நெருக்கடி. பணத்தைப் பெருக்குவதற்கான போட்டியின் பொது விளைவு தான், உலகப் பொருளாதார நெருக்கடி. இந்த வகையில் நிதிமூலதனமும், முதலீட்டு மூலதனமும் இதை உருவாக்குகின்றது.

## நிதி மூலதனம் என்பது என்ன?

உற்பத்தியில் ஈடுபடாது தன்னைத்தான் பெருக்கும் மூலதனம். இது இன்று பெரும் கடன் மூலதனமாக மாறி இருக்கின்றது. இது உற்பத்தி மூலதனத்தில் இருந்து தான் தன்னை பெருக்குகின்றது. உலகில் அமெரிக்கா உள்ளிட்ட பெரும் பொருளாதார நாடுகள் கூட, வாங்கிய கடன் அதன் மொத்த தேசிய வருமானத்தைவிட அதிமாகும். இதற்கான வட்டி முதல் கடன் மீளக் கொடுப்பனவுக்காகவே, தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை செலவு செய்கின்றது. இதைச் செலுத்த முடியாத பொது நெருக்கடி, உலகப் பொருளாதார நெருக்கடியாக மாறுகின்றது. இதை இன்று செலுத்த முடியாத போக்கு, இன்று உலகெங்கும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இன்று ஐரோப்பாவில் இந்த நெருக்கடி அலையலையாக வருகின்றது. இதைக் கொடுக்க சமூக வெட்டுகள் மற்றும் அரசு துறையை இல்லாதாக்குவது, சம்பளக் குறைப்புகள், புதிய வரிகள் போன்றவற்றின் மூலம் கிடைக்கும் பணத்தை கடன் தவணைக்கும், வட்டியாகவும் கொடுக்க முனைகின்றனர். மக்கள் மேல் இதை சுமத்துவதன் மூலம், இதற்கு தற்காலிக தீர்வு காண முனைகின்றனர்.

அதேநேரம் இந்த நிதி மூலதனத்தின் இன்னுமொரு பகுதி தான் பங்குச் சந்தை, ஊக வாணிபம், எங்கும் இயங்குகின்றது. இதன் மூலம் உற்பத்தியில் ஈடுபடாது, தன்னை உற்பத்தியில் இருந்து பெருக்கிக் கொள்ளுகின்றது. மக்களை எதுவுமற்ற பரதேசிக் கூட்டமாக்குகின்றது. உற்பத்தி மூலதனத்துக்கு கடன் கொடுக்கும் நிதி மூலதனம், அதை ஓட்ட உறிஞ்சுகின்றது. இப்படி நிதி மூலதனம் உற்பத்தியில் ஈடுபடாது உறிஞ்சுவதால், இறுதியில் உறிஞ்ச எதுவுமற்ற நிலையில் நிதி மூலதனம் கூட பொது நெருக்கடியில் சிக்கி திவலாகின்றது.

## முதலீட்டு மூலதனம்

மார்க்ஸ் மூலதனத்தில் கூறியது போல் “உற்பத்தித் துறைகள் மீது பாட்டாளிகளின் பொது அமைப்பு கட்டுப்பாடு செய்யவேண்டும் என்ற கருத்தை எதிர்க்கும் முதலாளித்துவச் சிந்தனையாளர்கள், சமுதாயம் முழுவதையும் அடிமைப்படுத்தும் ஒரு மாபெரும் தொழிற்சாலை அமைப்பாக மாற்ற விரும்புகின்றனர்.” என்றார். இதன் விளைவு இன்று உலகப் பொருளாதார நெருக்கடியாகின்றது. இது என்ன செய்கின்றது. மூலதனத்தைப் பெருக்க, அது ஒன்றையொன்று அழிக்கும் போட்டியாக மாறுகின்றது. இந்த நெருக்கடி, இறுதியில் சங்கிலித் தொடராக மாறிவிடுகின்றது. பணத்தை பெருக்குவதற்காக சந்தையைக் கைப்பற்ற முனைகின்றது. விலையைக் குறைப்பதன் மூலம், தனது போட்டி மூலதனத்தை அகற்ற முனைகின்றது. உற்பத்தியில் புதிய தொழில் நுட்பத்தை புகுத்துவதன் மூலம், சந்தையை ஆக்கிரமிக்க முனைகின்றது. போட்டியாளனை இல்லாதாக்க எல்லாவிதமான இழிவான செயலிலும் ஈடுபடுகின்றது.

அதேநேரம் மூலதனம் தனக்கான புதிய சந்தையைத் தேடுகின்றது. சந்தையைக் கைப்பற்ற எல்லாவிதமான குறுக்கு வழியையும் நாடுகின்றது. யுத்தங்களை நாடுகின்றது. நாடுகளை தனிமைப்படுத்தி கட்டுப்படுத்துகின்றது. நாடுகளை ஆக்கிரமிக்க முனைகின்றது. தனது மூலதன சந்தையை பாதுகாக்க படைகளை உலகெங்கும் நிறுத்துகின்றது. அதேநேரம் மூலதனம் சார்ந்து ஏகாதிபத்திய முரண்பாடுகள் தீவிரமாகி முன்னுக்கு வருகின்றது. மூலதனத்தை பாதுகாக்க, புதிய சர்வதேச அணி சேர்க்கைகள் உருவாகின்றது.

மறுதளத்தில் குறைந்த கூலியைத் தேடி உலகெங்கும் மூலதனம் ஓடுகின்றது. உழைப்பிற்கான நேரத்தைக் கூட்டுகின்றது. கூலியை குறைக்கின்றது. ஆட்குறைப்பைச் செய்கின்றது. உற்பத்தி (உற்பத்தி திறனை) செய்யும் வேகத்தைக் கூட்டுகின்றது. சந்தையைக் கைப்பற்ற, பொருளின் விலையைக் குறைத்து போட்டி மூலதனத்தை அகற்ற முனைகின்றது. இதில் இருந்து மூலதனத்தை காப்பாற்ற, உற்பத்தியைக் கூட நிறுத்திவிடுகின்றது.

மூலதனம் ஒன்றையொன்று அழிக்கும் போட்டியில், போட்டி மூலதனம் அழிகின்ற போது உற்பத்தி நிறுத்தப்படுகின்றது. வேலை இழப்பு ஏற்படுகின்றது. இந்தப் போட்டியை ஈடு கொடுக்க மூலதனங்கள் தமக்குள் இணைந்து அல்லது தனித்தும் போட்டியிடுகின்றன. அதே நேரம் ஆட் குறைப்பைச் செய்கின்றது. தொழில் நுட்பத்தை புகுத்தி உற்பத்தியை பெருக்குவதன் மூலம், குறைந்த விலை மூலம் சந்தையை ஆக்கிரமிக்க முனைகின்றது.

இந்தப் பொது நெருக்கடியின் விளைவு, நுகரும் தரப்பின் வாங்கும் சக்தியை இல்லாதாக்குகின்றது. சந்தை தேக்கத்துக்கு உள்ளாகின்றது. ஒருபுறம் மூலதனத்துக்கு இடையிலான போட்டி சந்தையின் பொதுத் தேக்கமாகவும், மறுபுறம் உழைப்புக்குரிய சந்தை இருப்பதில்லை. நுகரக் கூடிய மக்களின் உழைப்பை மறுத்துவிடுவதால், நுகரப் பணம் இருப்பதில்லை. மனிதனை உழைப்பில் அன்னியமாக்குவதன் மூலம் தான், அவனின் கூலியை குறைப்பதன் மூலம், சந்தையில் பொருளை குவிக்க முடிகின்றது. ஆனால் சந்தையில் இதை நுகரக் கூடிய நிலையில் மக்கள் வாழ்க்கைத்தரம் இருப்பதில்லை. பொது பொருளாதார நெருக்கடியில், தொடர்ந்து நுகர்வு வீழ்ச்சி காண்கின்றது.

மூலதனம் தனது போட்டி மூலதனத்தை மட்டும் அழிப்பதில்லை, நுகரும் மக்களின் தரத்தை அழிக்கின்றது. இதனால் உற்பத்தியை நுகர முடியாத சூழல் உருவாகின்றது. மூலதனம் இதை செய்யும் போது, மக்களின் தேவைகள் குறைந்து விடுவதில்லை. நுகர முடியாததால், தேவைகள் அதிகரிக்கின்றது. தேவைகளைப் பூர்த்தி செய்ய, அவர்களிடம் பணம் இருப்பதில்லை. உழைப்பை விற்று பணத்தைச் சம்பாதிக்க மூலதனம் அனுமதிப்பதில்லை. உண்மையில் மனித தேவைகள் இதனால் மறுக்கப்படுகின்றது. சந்தையில் அது குவிந்து நுகரப்பட முடியாத பொருளாகி தேங்கிவிடுகின்றது. நுகர்வுக்கும் உற்பத்திக்கும் இடையில் உள்ள இடைவெளி, இதனால் மேலும் அதிகரிக்கின்றது. மக்கள் வாங்கும் திறனை மேலும் மேலும் இழக்கின்றனர்.

பொருள் தேங்க உற்பத்தியை நிறுத்துவதில் முடிகின்றது. இதன் மூலம் மேலும் வேலை இழப்பு ஏற்பட, நுகர்வின் அளவு மேலும் குறைகின்றது. உற்பத்தி நிறுத்தம் இறுதியில் சந்தையை வெறுமையாக்கி, விலையை உயர்த்துகின்றது. இது வாங்கும் திறனை மேலும் இல்லாதாக்குகின்றது. இப்படி சுழல் வட்டமாகவே இது நிகழ்கின்றது.

இந்த மூலதன நெருக்கடியில் பல ஆயிரம் தொழிலாளர்கள் நாள் தோறும் தங்கள் வேலையை இழக்கின்றனர். சுரண்டலின் அளவு அதிகரிக்கின்றது. சுரண்டலின் பண்பு கொடூரமானதாக மாறுகின்றது. உலகப் பொருளாதார நெருக்கடி, வர்க்கங்களை விழிப்படைய வைக்கின்றது. வர்க்கப் போராட்டமும் அரசியல் வடிவம் பெற்று கூர்மையாகின்றது. இது தான் இன்று நடந்து வருகின்றது.

## இதற்கு எதிராக நாம் என்ன செய்ய முடியும்

உழைக்கும் மக்கள் தமக்கு எதிரான மூலதன கொள்கைக்கு எதிராக போராடுவதன் மூலம், மக்கள் தாமே மூலதனத்ததை கண்காணிக்கும் சொந்த அதிகாரத்துக்காக போராடவேண்டும். இன்று உலகளவில் ஒவ்வொரு நாட்டிலும் இதற்கான போராட்டங்கள் நடக்கின்றது. அந்த வகையில் நாம், அதனுடன் இணைந்து போராட வேண்டும். உலக மூலதனத்துக்கு எதிராக எந்த நாட்டில் போராட்டம் நடந்தாலும், அது எமக்கான போராட்டத்தின் ஒரு பகுதி. இந்த வகையில் அதனுடன் கைகோர்த்து தோழமையுடன்

**தொடர்ச்சி 15ம் பக்கம்**

# விஸ்வரூபம்

# வின்னர்களின் விளையாட்டு



> “நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பலனை அனுபவித்து சகல கலைகளிலிருந்தும் உழைப்பின் சாரத்தை உறிஞ்சி எடுத்துவிட்டு அதனை இன்று கூவிக் கூவி விற்கின்றனர்”

முதலாளியத்திற்குள் சகலதிற்கும் விலை உண்டு. ஆனால் எதற்குமே மதிப்பில்லை. உணர்வுகள் கூட இங்கு காசிற்கு விற்கப்படுபவைதான். விலைபோகும் அளவிற்கே உணர்வுகள் இங்கு மதிப்பை பெறும். உழைக்கும் வர்க்கத்தின் கலையுணர்விற்கும் இதே நிலைதான். உழைக்கும் வர்க்கம் தன் உழைப்பால் உருவாக்கிய ஒட்டுமொத்த கலைகளும் சினிமா என்ற பொதிக்குள் அடக்கப்பட்டு விற்கப்படுகின்றன. பரபரப்பு கூட விற்பனைப் பண்டந்தான். இதன் காரணமாகத்தான் சினிமாத் துறையில் முதலீடு செய்யப்பட்டு பரபரப்பு உருவாக்கப்படுகின்றது. இப்படி பரபரப்பை தமிழ் சினிமாவில் ஏற்படுத்திய திரைப் படங்களில் ஒன்றுதான் விஸ்வரூபம். விஸ்வரூபம் ஏற்படுத்திய பரபரப்பு பல பத்திரிகைகளிற்கு தீனி போட்டது. சில பத்திரிகைகள் வேண்டுமென்றே பரபரப்பாக்கின (அதிக பரபரப்பு அதிக இலாபத்தை தருமிங்கு) இப்படி பரபரப்பை ஏற்படுத்திய விஸ்வரூபம் திரைப்படத்தினைப் பற்றிய விமர்சனங்களைத் தனி நபர்களும் ஊடகங்களும் போட்டிபோட்டு எழுதிக்கொண்டு இருக்கின்றார்கள். எமது நோக்கம் விஸ்வரூபம் திரைப்படத்தை விமர்சிப்பது அல்ல. இவ்வாறு விமர்சிப்பது எய்பவனுடன் மோதாமல் எய்யப்பட்ட பொருளுடன் மோதுவதற்கு சமனானதாகும்.

மனிதர்களின் உழைப்புடன் இணைந்து தோற்றம் பெற்று உழைக்கும் மக்களுக்காகவே பயன்பட்ட கலைகள் முதலாளித்துவத்தில் விற்பனைப் பண்டமாக்கப்பட்டு மனித உழைப்பிலிருந்தும் வாழ்க்கையிலிருந்தும் அந்நியப்பட்டவையாக ஆக்கப்பட்டுள்ளன. **நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் பலனை அனுபவித்து சகல கலைகளிலிருந்தும் உழைப்பின் சாரத்தை உறிஞ்சி எடுத்துவிட்டு அதனை இன்று கூவிக் கூவி விற்கின்றனர்.** இருநூற்று முப்பதுகோடி ரூபாய் முதலீட்டில் தயாரிக்கப்பட்ட விஸ்வரூபம் இஸ்லாமியர்களின் மனங்களை புண்படுத்துவதாகக் கூறி தமிழ்நாடு அரசாலும் அதனைத் தொடர்ந்து இலங்கை அரசாலும் தடை செய்யப்பட்டன. குறிப்பாக தமிழ் நாட்டின் அரசாங்கத்தினால் 144 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த நிலையில் தான் விஸ்வரூபத்தில் அப்படி என்ன விஸ்வரூபமாக இருந்தது எனப் பார்க்க வேண்டியுள்ளது.

கமலஹாசன் காஷ்மீரி எனும் இஸ்லாமியராக நடித்துள்ளார். இந்திய உளவுத் துறையான றோவும் அமெரிக்க உளவு துறையான CIAயும் இஸ்லாமிய தமிழரான காஷ்மீரியை ஆப்கானிஸ்தான் தலிபான் அமைபிற்குள் உளவு பார்க்க அனுப்புகின்றன. குறிப்பாக தலிபான்களினால் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க இராணுவம் தொடர்பான தகவல்களை பெறுவதற்காக அனுப்புகின்றன. காஷ்மீரி ஒரு உளவாளி என்பது தலிபான்களிற்கு தெரியவர அங்கிருந்து தப்பிக்கும் காஷ்மீரி, அமெரிகாவிற்கு சென்று அங்கு கதக் நடன ஆசிரியராக வாழ்க்கை நடத்துகிறார். உளவுத் துறையினருடான தொடர்பும் அப்படியே இருக்கின்றது. ஒரு கட்டத்தில் அமெரிக்காவிலே அணுத் தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் வந்திருக்கும் தலிபான் குழுவினரை காஷ்மீரி சந்திக்க நேர்கின்றது. பின் நடப்பவைதான் திரைப்படம்.

தமிழ்நாட்டின் 24 முஸ்லிம் அமைப்புக்கள் விஸ்வரூபம் திரைப்படத்தில் இஸ்லாமியர்களை புண்படுத்தும் காட்சிகள் இருப்பதாக எதிர்ப்பை தெரிவிக்க ஜெயலலிதா தலைமையிலான அரசாங்கம் உடனே திரைப் படத்தினை தடை செய்திருந்தது. உண்மையாக இஸ்லாமியர்களை புண்படுத்தும் காட்சிகள் ஏதேனும் திரைப்படத்தில் இருக்கின்றனவா என்று ஆராயாமலே தடை விதித்தது தமிழ் நாட்டு அரசாங்கம். இவ்விடயம் நீதிமன்றில் அம்பலப்படவே அத் தடையை நீக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. திரைப் படத்தில் இஸ்லாமியர்களை புண்படுத்தும் விதமான காட்சிகள் எதுவும் அதில் இருப்பதாகத் தெரியவில்லை. சகலருக்கும் தெரிந்த தலிபான் அமைப்புத் தொடர்பான காட்சிகளே காட்டப்பட்டுள்ளன. தலிபான் அமைப்பின் வன்முறைகளை திரையிடுவதும் இஸ்லாமியர்களை புண்படுத்துவதும் ஒரே விடயங்களல்ல. இந்திய இஸ்லாமியனாக நடித்த கமலஹாசன் பாத்திரம் எந்த இடத்திலும் இஸ்லாமியர்களை புண்படுத்தும் விதமாக இல்லை. உண்மையாகவே தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் விஸ்வரூபத்தை தடைசெய்யக் கோரிய அமைப்புக்கள் இஸ்லாமியர்கள் புண்படுத்தப்படக் கூடாது என்ற ஆதங்கம் உள்ளவர்களாக இருந்தால் தலிபான் அமைப்பையும், இலங்கையில் இஸ்லாமியர்கள் கீழ்த் தரமாக நடத்தி அவமானப்படுத்தும் முஸ்லிம்கள் மீதான வன்முறைகளை கட்டவிழ்த்து விடும் அமைப்புகளை அல்லவா தடைசெய்யக் கோரவேண்டும்?

சில மாதங்களுக்கு முன் இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பா.சிதம்பரத்தின் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய கமல்ஹாசன் சிதம்பரம் இந்தியாவின் அடுத்த பிரதமராக வேண்டும் என உரையாற்றினார். பிரதமராகும் கனவில் இருக்கும் ஜெயலலிதாவிற்கு இது பெரும் கோபத்தை ஏற்படுத்த அவர் விஸ்வரூபமெடுத்துவிட்டார். சினிமா நடிகை என்ற மாயாஜாலக் கவர்ச்சியை பயன்படுத்தி முதல்வரான ஜெயலலிதாவிற்கு கமலஹாசன் எனும் நடிகனின் கருத்தும் வகிபாகமும் அரசியலில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன என்பது நன்கு தெரியும். இதுதான் விஸ்வரூபம், விஸ்வரூபமானதிற்கு காரணம். தன் பழிவாங்கலிற்கு இஸ்லாமிய அமைப்புக்களை துணையாக்கிக் கொண்டார் ஜெயலலிதா. இந்த விடயத்தில் இலங்கை இஸ்லாமிய அமைப்புகளும் தடைவிதிக்கக் கோரிக்கை விடுக்க இலங்கை அரசாங்கமும் தடைவிதித்தது, இலங்கையில் பொது பலசேனா, ஹெல உறுமய போன்ற அமைப்புகளினால் இஸ்லாமிய சமூகத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரச்சாரங்களிற்கு பூரண ஆதரவை வழங்கி அதன் பயன்களை அறுவடை செய்யும் இலங்கை அரசாங்கம், தனக்கு எதிரான பக்கம் இஸ்லாமிய மக்கள் சொல்வதைத் தடுக்கும் முகமாக இவ் விவகாரத்தைப் பயன்படுத்த முடிந்தது. ஆனால் அது கைகூடவில்லை. இஸ்லாமியர்களை புண்படுத்துகின்றது என்பதற்காக திரைப் படத்தை தடைசெய்யும் மகிந்த அரசாங்கம் இஸ்லாமியர்களை கொன்றொழிக்கத் துடிக்கும், கேவலப்படுத்தும் இஸ்லாமியச் சமூகம் மீது இனவாதத்தினை முன்னெடுக்கும் ஹெல உறுமய மற்றும் பொது பல சேனா போன்ற அமைப்புகளை ஆதரித்து அனுசரணை வழங்கி நிற்பது அதன் உண்மை முகத்தைக் காட்டுகின்றது.

விஸ்வரூபம் ஜெயலலிதாவிற்கு விஸ்வரூபமாகத் தெரிய இன்னுமொரு காரணமும் இருக்கின்றது. விஸ்வரூபம் படத்தில் அணுவாயுதங்கள், அணுக் கதிரியக்கம், அணு கதிரியக்கம் புற்று நோயை எடுபடுத்துவது மற்றும் அணு மூலப் பொருட்கள் தொடர்பாக காண்பிக்கின்றார்கள். கூடங்குளத்தில் அணு உலைகளை நிறுவி தன் அரசு மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளவும் முடியுமான அளவு காசு பார்த்துவிடவும் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவிற்கு கூடங்குளத்தில் மக்கள் நடாத்தும் போராட்டங்கள் சவாலாய் அமைந்துள்ள நேரத்தில், அணுக் கதிர் வீச்சு தொடர்பாக மக்களிடம் இலகுவாக சென்றடையக் கூடிய சினிமாத் திரைப்படத்தில் காட்சிகள் இடம் பெறுவது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெளிவாகத் தெரியும். அதன் காரணமாகத்தான் தடையும் அதன் பின்பான சில காட்சி நீக்கமும் இடம்பெற்றது.

இடை வேளைக்குப் பின்புதான் படத்தில் அணுக் கதிர் தொடர்பாகக் கதைக்கின்றார்கள். ஆனால் இடைவேளைக்கு பின்பு இடம்பெற்ற சில காட்சிகள்தான் இதில் நீக்கப்பட்டுள்ளன. இப் படத்தை இடை வேளையின் பின்பான கதையமைப்பில் தொய்வு ஏற்படும் வகையில் அணுக்கதிர் தொடர்பான சில காட்சிகளும் நீக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மறுபுறம் தடைசெய்யும் அளவிற்கு இதுவொன்றும் மக்கள் கலைப் படைப்பல்ல. இருநூற்று முப்பது கோடி ரூபாய் முதலீடுசெய்து இலாபத்தை நோக்காகக் கொண்ட தயாரிப்பு. சகலதையும் விலை பேசும் முதலாளித்துவத்தில் கமலஹாசன் முதல் கந்தப்பு ஜெயந்தன் வரைக்கும் இதற்கு விதிவிலக்காகிவிட முடியாது. **உழைப்பின் சாரத்தை இழந்து முதலாளித்துவத்தில் மரணித்துக் கிடக்கும் கலையை மீட்க உழைக்கும் வர்க்கம் கலைப் புரட்சியை நடத்த வேண்டும். உழைப்புடன் பிணைக்கப்பட்ட கலையே உழைக்கும் வர்க்கத்தின் கலையாகும்.** இதுவே எமக்கு பயன்படும் கலையாகும். புரட்சிகர கலைஞர்களும், புரட்சிகர கலைச் சங்கங்களும் கலையை மீட்டெடுக்கும் புரட்சியை நடாத்த முதலாளித்துவத்தை எதிர்த்து ஒழுங்கமைய வேண்டும். அதாவது மக்களின் கலையுடன் இணைந்திடாத புரட்சியும் விடுதலையும் இருட்டறைக்குள் இருக்கும் கண்ணாடிக்குச் சமமானதாகும்.

**“உழைப்பின் சாரத்தை இழந்து முதலாளித்துவத்தில் மரணித்துக் கிடக்கும் கலையை மீட்க உழைக்கும் வர்க்கம் கலைப் புரட்சியை நடத்த ”வேண்டும்.**

# சிறு நீரக நோய்த்தாக்கம் வெளிவரும் அதிர்ச்சிகள்


## சூழலில் பெருகி வரும் நச்சுப்பதார்த்தங்கள் இடம்பெயரும் விவசாயிகள்




வட மத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் பரவலாக சிறுநீரக நோய் பரவி வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதோடு, இந்நோய் தற்போது வவுனியா, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, மொனராகலை, பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலும் கண்டறியப்பட்டுள்ளது. மிகப் பெரிய சமூக பிரச்சினையாக உருவெடுத்து மெல்ல மெல்ல முழுநாட்டையும் ஆக்கிரமிக்கும் சமூக அவலமான சிறுநீரக நோய் தொடர்பாக தெளிவான அரசியல் ஆய்வுடன் இதற்கு எதிராக மக்களைத் திரட்டவேண்டியது இடதுசாரிகளின் கடமையாகும். அதற்கான முதற்படி கலந்துரையாடலே ஆகும்.

அநுராதபுர மாவட்டத்தில் 1992 ம் ஆண்டு 70 விவசாயிகள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டமையும் அவர்களில் 17 பேர் அந்த வருடத்தில் பலியானமையும், சிறுநீரக நோய் தொடர்பாக கவனம் செலுத்தப்பட காரணமாய் அமைந்தது. 2012 ஆண்டாகும் போது அநுராதபுர மாவட்டத்தில் 11,212 சிறுநீரக நோயாளர்களும் பொலநறுவை மாவட்டத்தில் 2,957 சிறுநீரக நோயாளர்களும் இனங்காணப்பட்டிருக்கின்றனர். அநுராதபுர பொது வைத்தியசாலையின் தகவல்படி 2003-2012 காலப்பகுதியில் அவ் வைத்தியசாலையில் இதற்காக சிகிச்சை பெற்றவர்களில் 1811 பேர் மரணமடைந்துள்ளனர். அதனடிப்படையில் பார்த்தால் ஒரு வருடத்திற்கு 201 சிறுநீரக நோயாளர்கள் என்ற அடிப்படையில் மேலும் விரிவாக சொல்வதென்றால் இரண்டு தினங்களுக்கு ஒரு நோயாளர் என்ற கணக்கில் சிறுநீரக நோய்கள் காரணமான மரணம் நிகழ்கின்றது. இந்நிலமை மேற்குறிப்பிட்ட மாவட்டங்களிற்கும் பரவிச்செல்ல ஆரம்பித்துள்ளது. சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி அநுராதபுர மாவட்டத்தில் 15 வீதமானவர்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2012 ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் சுகாதார அதிகாரிகள் அநுராதபுர மாவட்டத்தில் 10,608 பேரிடம் நடத்திய ஆய்வில் 1414 பேர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அதுவரை அவர்கள் தமக்கு சிறுநீரக நோய் ஏற்பட்டிருப்பதாக அறிந்திருக்கவில்லை. இந்த எண்ணிக்கை 13 வீதமாகும். இதன் மூலம் சிறுநீரக நோய் சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கும் பாரதூரமான நிலைமையை விளங்கிக் கொள்ள முடியும்.

அநுராதபுர பகுதியில் பரவிவரும், இதுவரை காரணம் கண்டறியப்படாத சிறுநீரக நோய் தொடர்பாக ஆய்வு செய்வதற்கு சிறப்பு ஆராய்ச்சிக் குழுவொன்றை உலக சுகாதார அமைப்பு (WHO) அனுப்பியுள்ளது. ஆனால், அரசாங்கமும் சுகாதார திணைக்கள அதிகாரிகளும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறைந்தபட்சம் ஆய்வுகளிற்கான நிதியைக் கூட ஒதுக்கவில்லை. உலக சுகாதார அமைப்பு ஆய்வு செய்து 2011 ம் ஆண்டு யூன் மாதம் வெளியிட்ட அறிக்கையில் வடமத்திய மாகாணத்தில் வாழும் 15 ற்கும் 70 ற்கும் இடைப்பட்ட வயதுடையவர்களில் 15 வீதமானோர் சிறுநீரக பாதிப்புகளிற்கு ஆளாகியுள்ளனர். 40 வயதைக் கடந்த ஆண்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் மத்தியிலேயே நோயின் தாக்கம் காணப்படுவதோடு, பாதிக்கப்பட்டவர்களில் அதிகளவானோர் பத்து வருடங்களிற்கும் மேலாக விவசாயத்தில் ஈடுபடுபவர்கள். நோய்த் தாக்கத்திற்குள்ளானவர்களில் 496 பேரின் சிறுநீர் மாதிரிகளில் உலக சுகாதார அமைப்பு மேற்கொண்ட பரிசோதனைகள் மூலம் சிறுநீர் மாதிரிகளில் கட்மியம் மற்றும் ஆசனிக் ஆகிய நச்சுப்பாதார்த்தங்கள் முறையே 56 வீதம் மற்றும் 63 வீதம் என்ற ஆபத்தான அளவில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பரிசோதனைக்கு எடுத்துகொள்ளப்பட் மாதிரிகளில் 88 வீதமானவற்றில் இந் நச்சுப்பதார்த்தங்களில் ஒன்றேனும் காணப்பட்டது. விவசாய நிலங்களில் வாழ்பவர்களில் 90 வீதமானோரின் தலைமுடியிலும் 94 வீதமானோரின் நகங்களிலும் அளவிற்கு அதிகமாக நச்சுப்பதார்த்தங்களான ஆசனிக்கும் கட்மியமும் காணப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, விவசாயிகளின் உடலில் அதிகளவு நச்சுப்பதார்த்தங்கள் காணப்படுவதுடன் விவாசாய நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் இரசாயன மற்றும் கிருமிநாசினிகள் தொடர்புபட்டிருப்பது மிகவும் தெளிவாகின்றது.





1977ம் ஆண்டின் புதிய தாராளமயவாத (திறந்த பொருளாதாரக் கொள்கை) முதலாளித்துவ சீரமைப்புக்களின் பின் ஏகாதிபத்தியவாதிகளினால் “பசுமைப் புரட்சி” என்ற பெயரில் பல மாற்றங்களை விவசாயத்துறையில் ஏற்படுத்தப்பட்டன. “பசுமைப் புரட்சி” என்ற பெயரில் நடைமுறையிலிருந்த சூழல்நட்புறவான விவசாய முறைகளை ஒழித்து, விதைகள் மற்றும் விவசாய உள்ளீடுகளை பெறுவதில் இருந்த விவசாயிகளின் சுயாதீனத்தன்மை இல்லாது ஒழிக்கப்பட்டு, விவசாயத்துறை முற்றிலுமாக பன்னாட்டுக் கம்பனிகளின் சந்தையாக மாற்றப்பட்டது. இதன் காரணமாக விவசாய இரசாயனங்களை உற்பத்தி செய்வதில் கம்பனிகளிடையே பலத்த போட்டி ஏற்பட்டது. சந்தைப்போட்டி காரணமாக ஆபத்தான இரசாயனங்களை ஆபத்தான அளவுகளில் தனது உற்பத்திகளில் பயன்படுத்தின. 1980 களில் லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆபிரிக்கக் கண்ட நாடுகளில், பன்னாட்டுக் கம்பனிகளே, விவசாய இராசாயனங்களை விற்பனை செய்வதற்காக, நோய் பீடைகள் மற்றும் நோய்களை பரப்பியமையை உதாரணங்கள் மூலம் அறியலாம். இலங்கையும் இந்நிலைமைக்குள் அகப்பட்டுள்ளதுடன், பன்னாட்டு கம்பனிகள் இலாபம் உழைப்பதற்காக விவசாயிகள் தங்கள் உயிர்களை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தில் கடும் தாக்கம் செலுத்தும் சிறுநீரக நோயும் இலாபத்தை மட்டுமே இலக்காக கொண்ட சுற்றாடல் தொடர்பாகவோ மனித வாழ்க்கை தொடர்பாகவோ சற்றும் கவலை கொள்ளாத மூலதனத்தை பெருப்பித்துக் கொள்வதை மட்டும் நோக்காகக் கொண்ட முதலாளித்துவத்தின் சீரழிப்பே ஆகும்.

ஏனைய துறைகளைப் போல் விவசாயத்துறையிலும் தன் ஆதிக்கத்தை செலுத்தியுள்ள ஏகாதிபத்தியமும் இலங்கையில் திணிக்கப்பட்ட முதலாளித்துவத்தின் பிற்போக்குத்தனமும் விவசாயிகளின் வாழ்வை மேலும் அனர்த்தத்திற்குள்ளாக்கியுள்ளது. வடமத்திய மாகாணத்தில் தாக்கம் செலுத்தும் சிறுநீரக நோயிற்கும் சூழலில் சேர்க்கப்படும் நச்சுப்பதார்த்தங்களுக்கும் தெளிவான தொடர்பிருப்பது நன்கு தெளிவான பின்பும், விவசாயத்தில் பயன்படுத்தும் இராசயனங்கள் தொடர்பாக கொள்கை ஒன்றையேனும் ஆட்சியாளர்களினால் வகுக்க முடியாமையானது அவர்களின் கையாலாகாத நிலையைக் காட்டுகிறது. மறுபுறம் சிறுநீரக நோய் ஏற்படுவதற்கு நச்சுப்பதார்த்தம் நிறைந்த குடிநீரும் காரணம் என்பதும் தெளிவாகும். விவசாய நிலங்களிற்கு அண்மையில் அமைந்திருக்கும் நீர்நிலைகளில் இருந்து குடிப்பதற்கான நீரைப் பெறுபவர்கள் இத்தாக்கத்திற்கு ஆளாகின்றார்கள். காரணம் விவசாய நிலங்களில் பயன்படுத்தப்படும் நச்சுப்பதார்த்தங்கள் நீருடன் கலப்பதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகும். சுத்தமான குடிநீரை பெறுவது மனிதனின் அடிப்படை உரிமையாகும். அவ் உரிமையைக் கூட ஆட்சியாளர்களினால் உறுதி செய்திட முடியவில்லை. நகர்ப்புற வாழ் மக்களுக்கு குடிநீர் விநியோகத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. எனினும் சுத்தமான நச்சுப்பதார்த்தங்கள் கலந்த நீரை அருந்துவதினால் ஆயிரக்கணக்கில் மக்கள் மரணித்த பின்னும் இன்னும் ஆயிரக்கணக்கானோராய் ஆபத்துக்களை எதிர்நோக்கும் பிரதேச மக்களிற்கு சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான திட்டங்கள் தொடர்பாக ஆட்சியாளர்கள் சிந்திக்கவே இல்லை. ஆகவே, சுத்தமான குடிநீரிற்காக மக்கள் போராட நிர்பந்திக்கப்பட்டுள்ளனர். வடமத்திய மாகாணத்தில் அச்சத்தின் காரணமாக பலர் அதிகவிலையில் நீரைக் கொள்வனவு செய்து பாவிக்கின்றார்கள். பணம் இல்லாதவர்கள் நச்சுப்பதார்த்தம் நிறைந்த ஆபத்தான நீரையே குடிக்கின்றனர்.

சிறுநீரக நோயிற்கான சிகிச்சை வசதிகள் இன்மை அவலத்தை அதிகரிக்க செய்துள்ளது. அரச வைத்தியசாலைகளில் இதற்கான அடிப்படை வசதிகள் கூட இல்லை. சிறுநீரக நோய் தொடர்பாக பரிசோதனை செய்யும் வசதி பிரதான வைத்தியசாலைகளில் மட்டுமே காணப்படுகின்றன. கிராமப்புற மக்கள் இலவச சிகிச்சையை பெறுவதற்காக பலமைல் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது .இல்லாதுவிடின் அதிக பணம் செலவு செய்து தனியார் வைத்தியசாலைகளை நாட வேண்டும். வடமத்திய மாகாணத்தில் பல குடும்பங்கள் தமது சொந்த விவசாயநிலங்களை கைவிட்டு வெளியேறுகின்றனர்.

இரு தசாப்பதங்களிற்கு மேலாக ஆயிரக்கணக்கானோர் மரணமடைந்த நோய் தொடர்பாக இதுவரை முறையான ஆய்வுகள் எதனையும் மேற்கொள்ளாத, வடமத்திய மாகாண மக்களின் தூய்மையான குடிநீரை பெறும் உரிமையை உறுதி செய்ய முடியாத, பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான இலவச சிகிச்சை வழங்க முடியாத, விவசாய இரசாயனங்களின் தரம் தொடர்பான குறைந்த வரையறையைக் கூட உருவாக்க முடியாத, சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க கவனம் செலுத்தாத முதலாளித்துவ அரசாங்கம் எமக்குத் தெரிவிப்பது என்ன? உரிமைகளை வென்றெடுக்கக் கட்டாயமாக போராடியே ஆக வேண்டும். மனித வாழ்க்கை மற்றும் சுற்றாடல் தொடர்பாக சற்றும் கவலைப்படாமல் இலாபம் பெறுவதை மட்டுமே இலக்காகக் கொண்ட இந்தச் சமூக பொருளாதார முறையை மாற்றியாக வேண்டும். இவ்விரண்டிற்கும் நெருங்கிய தொடர்பிருக்கின்றது. சுத்தமான குடிநீர், இலவச மருத்துவ சேவைக்கான போராட்டங்கள் சமூகப் பொருளாதார முறையை மாற்றியமைக்கும் போராட்டங்களாக விரிவுபடுத்தப்படல் வேண்டும். இந்த அரசியல் தெளிவுபடுத்தல்களை மக்களுக்கு வழங்குவதும், சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்வதற்காகவும், இலவச சுகாதார சேவையை பெற்றுக்கொள்வதற்காகவும் தினம் தினம் வலுவிழந்து செல்லும் முதலாளித்துவத்திற்கு எதிராக மக்களை அமைப்பு ரீதியாக அணித்திரட்டுவதே இடதுசாரிகளின் தற்போதைய முக்கிய பணிகளில் ஒன்றாகும். இல்லாதுவிடின் தொடர்ந்தும இரண்டு தினங்களுக்கு ஒருவரை சிறுநீரக நோய்க்கு பலி கொடுத்தாக வேண்டும். நாளை நாம் கூட அந்த இருவரில் ஒருவராய் இருக்கலாம்.

“எப்படி இருக்கின்றீர்கள் லால்? நல்லது, நாங்கள் நேரடியாக விடயத்திற்கு வருவோம், லீடர் வெளியீட்டு நிறுவனத்தின் விலை என்ன? நாங்கள் பேரத்தை 400 மில்லியனோடு முடித்து விடுவோமா?”

இடம் அலரிமாளிகை. விலை நிர்ணயித்தவர் வேறு யாருமல்ல, அதிபராக்கிரம சர்வ வல்லமை பொருந்திய மேன்மைதங்கிய சனாதிபதி சர்வாதிகாரி மகிந்த ராசபக்ச. சர்வ அதிகாரத்தையும் தன்னிடம் கொண்டிருக்கும் ஒருவர் யாருடன், எதற்காக பேரம் பேசுகின்றார் என்று அறிய ஆவலாய் இருக்கின்றதல்லவா? மகிந்தவை தொடர்ச்சியாக அம்பலப்படுத்திய லீடர் வெளியீட்டு நிறுவனத்தின் உரிமையாளர் லால் விக்ரமதுங்கவுடனேயே இப் பேரம்பேசல் நடைபெற்றது. இப் பேரம்பேசல் நடப்பதற்கு சற்று முன் ஊடகத்துறை பிரதியமைச்சர் பைசர் முத்தப்பாவிற்கு சர்வாதிகார சனாதிபதி மகிந்த, லால் விக்ரமதுங்கவை அழைத்து வரும்படி பணிப்புரை விடுத்தார். லாலை தொலைபேசியில் அழைத்து செய்தி ஒன்றை பிரசுரிக்க லீடர் நிறுவனத்திற்கு வரவேண்டி இருப்பதாக தெரிவித்தார் பைசர். உறுதியளித்தப்படி வந்த பைசர் காத்திருந்த லாலிடம் வாகனத்தில் பிரயாணித்தவாறு கதைக்கலாம் எனக் கூறினார். வாகனத்தில் ஏறிய லால் சனாதிபதியின் முன் அழைத்து வரப்பட்டார். லால் ஒன்றும் கதைக்கவில்லை. சனாதிபதி பேரம் பேசினார். லால் ஒத்து வரவில்லை. இது நடந்தது போர் தீவிரம் அடைவதற்கு முன்பு. லீடர் நிறுவனத்தின் சண்டே லீடர் பத்திரிகை மகிந்தவின் அட்டூழியங்களையும், ஒரளவிற்கு தமிழ் மக்களின் நியாயங்களையும் அம்பலப்படுத்திய முதலாளித்துவப் பத்திரிகையாகும். சிலகாலம் கழித்து சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டார். தொடர் அழுத்தங்கள் மூலம் லீடர் நிறுவனம் ஓரளவிற்கு அடிபணிய வைக்கப்பட்டது. இதன் காரணமாகத்தான் சரத் பொன்சேகாவின் வெள்ளைக்கொடி விவகாரத்தை எழுதிய பெட்ரிகா பீரியிச் சண்டே லீடரிலிருந்து விலக்கப்பட்டார். அண்மையில் நுரைச்சோலை அனல் மின்நிலையத்தில் நடந்த ஊழலை வெளிகொண்டு வந்த சண்டே லீடரின் ஊடகவியலாளர் சவுக்கார் பரான் அலி சுடப்பட்டார். மகிந்த சிந்தனையின் ஊடகச் சுதந்திரம் இந்த நிலையில்த்தான் இருக்கின்றது. தனக்கு எதிரான ஊடக நிறுவனங்களை அச்சுறுத்தி விலைக்கு வாங்குதல், ஊடகவியலாளர்களை அச்சுறுத்துதல், அடிபணியாதவர்களை கொலைசெய்தல் என்பன இலங்கையின் கலாச்சாரமாகி விட்டன. மகிந்த மாதந்தோறும் ஊடகவியலாளர்களுக்கு அலரிமாளிகையில் வழங்கும் விருந்துபசாரத்திற்கு நன்றிக் கடன் செலுத்தாத அனைவருக்கும் இதே நிலைதான்.

தமிழ் மக்களின் அபிலாசைகளிற்கு ஆதரவாக, தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான, தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுக்கும் சகலரையும், ஆட்சி அதிகாரத்தை பெற்றிருக்கும் பௌத்த பேரினவாத அரசுகள் மிலேச்சத்தனமாக ஒடுக்கின. அதனை மகிந்த மேலும் மிலேச்சத்தனமாக செய்கின்றார். இனப் படுகொலை ஒன்றினூடாக தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கிய மகிந்த, தொடர்ந்து எந்தவித உரிமைக் கோரிக்கைகளோ, போராட்டங்களோ எழுச்சி பெறுவதை தடுத்து நிறுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றார். தமிழர்களின் பிரச்சினைகளை கோரிக்கைகளை வெளிக் கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் மற்றும் மக்கள் நலன் சார்ந்து இயங்கும் ஊடக நிறுவனங்கள் மீது தொடர்ச்சியான வன்முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் தமிழர் நலன் சார்ந்து இயங்கும் ஊடக நிறுவனங்கள் மீதான வன்முறைகளை பட்டியலிடப் போதிய அளவில் இங்கு இடமில்லை. உதயன், வலம்புரி, தினக்குரல், ஈழநாடு பத்திரிகைகள் மீதான வன்முறைகள் எண்ணுக் கணக்கு அற்றவையாகும். தமிழர் தரப்பு நியாயங்களை எவரேனும் சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்க முனைவார்களாயின் அவர்களை அழித்தொழிக்க பேரினவாதிகள் சற்றும்



# பேய்களின் ஆட்சியில் சாத்திரங்களை தின்னும் பிணங்கள்..!

## பாசிசப்பேய்களின் ஆட்சியில் ஊடக சாத்திரங்களை கொன்று தின்னும் பேரினவாதப் பேய்களின் தொடரும் ஊடக அடக்குமுறைகள்

தாமதிப்பதில்லை.

மகிந்த ஆட்சியில் இதுவரை 33 ஊடக பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதில் 3 சிங்கள ஊடகவியலாளர்கள் தவிர்ந்த ஏனைய அனைவருமே தமிழர்கள். மேலும் 60இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்கள். அச்சுறுத்தல் காரணமாக ஈழநாடு பத்திரிகை நிறுத்தப்பட்டது. ஈழநாடு பத்திரிகையின் முகாமையாளர் சின்னத்தம்பி சிவராசா 20.08.2006 அன்று படுகொலை செய்யப்பட்டார். தமிழ் மக்களின் பிரச்சினைகளை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லமுயன்ற மௌபிம பத்திரிகை சில காலம் இயங்காமல் முடக்கப்பட்டது. தமிழ்நெற் உட்பட பல இணையத் தளங்கள் பார்வையிடுவதற்கு தடைசெய்யப்பட்டன.

தமிழ் மக்களை அரசியல் ரீதியாக எழுற்சியடைய விடாமல் தடுத்து நிறுத்தும் நோக்குடன் உண்மைகளை மூடிமறைக்க தமிழ் ஊடகங்கள் மீதான வன்முறைகளை கட்டவிழ்த்துள்ள அரசாங்கம் தமிழ் மக்களின் நியாயங்கள் சிங்கள மக்களிடம் சென்றடைவதை தடுத்து நிறுத்தி தெற்கைத் தொடர்ந்து தனது சிங்கள பௌத்த பேரினவாத கருத்து மேலாண்மைக்குள் வைத்திருக்கும் நோக்கில் சிங்கள ஊடகங்கள் மீதும் ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துள்ளது.

வடக்கு கிழக்கிலே ஊடகவியலாளர்கள் சுயாதீனமாக சுதந்திரமாக செயற்பட முடியாத நிலையே காணப்படுகின்றது. பல இடங்களில் ஊடகவியலாளர்கள் இராணுவ புலனாய்வாளர்களுக்கு தகவல் வழங்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். அவ்வாறு செய்யாவிடின் அவர்களால் ஊடகத் துறையில் இயங்க முடியாது. ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக செய்தி சேகரிக்க வடக்கு கிழக்கை நிர்வகிக்கும் இராணுவம் அனுமதி வழங்குவதில்லை. உண்மைகளைத் தைரியமாக வெளிக் கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்றார்கள், படுகொலை செய்யப்படுகின்றார்கள். அத்தனை அச்சுறுத்தல்களிற்கு மத்தியிலும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் செய்தித்தாள்கள் உண்மைகளைத் தைரியமாக வெளிக்கொண்டு வருகின்றன. உண்மைகள் மக்களைச் சென்றடைவதை அரசாங்கத்தினால் தடுத்து நிறுத்த முடியவில்லை. உண்மைகளை மறைத்துப் பொய்யான செய்திகளை வழங்கி மக்களை திசை திருப்புவதற்காக அரசாங்கம் தன் முழு அதிகாரத்தையும் பாவித்துவருகின்றது. குறிப்பாக யாழப்பாணத்தில் சக்தி தனியார் தொலைக் காட்சியின் ஒளிபரப்பை திட்டமிட்டு தடுக்கும் அரசாங்கம் தனது வசந்தம் தொலைக் காட்சியை தடையின்றி ஒளிபரப்பி, பொய்யான தகவல்கள் மூலம் மக்களை திசைதிருப்பி வருகின்றது. அரச அடிவருடியான டான் தொலைக்காட்சி சேவை தேவானந்தாவிற்கும் அரசாங்கத்திற்கும் ஆலவட்டம் வீசி மக்களின் சிந்தனையை மலடாக்குவதை சூட்சுமமான முறையில் மேற்கொள்கின்றது. இச் சேவைக்கு அனுமதி வழங்கப்பட்ட விதமும் மர்மமாகவே இருக்கின்றது. என்னதான் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பொய்ப் பிரச்சாரம் செய்தாலும் இணையங்கள் மூலமும் செய்தித்தாள்கள் மூலமும் உண்மைகள் மக்களிடம் சென்றடைவதை தடுத்து நிறுத்த முடிவதில்லை.

தேவானந்தாவின் தினமுரசு பத்திரிகையை பலவந்தமாக விற்பனை செய்தும், யாழ் ஊடகவியலாளர்களை படுகொலை செய்தும் உண்மைகளை மூடி மறைக்கமுடியாத அரசாங்கமும் அவர்களுக்கு முந்தானை விரிக்கும் ஈ.பி.டி. பியினரும் தற்போது பத்திரிகை விநியோகப் பணியை முடக்கும் முகமாக தற்போது விநியோக பணியாளர்களை அச்சுறுத்தியும் அவர்களை தாக்கியும் வருகின்றனர். கடந்த சில மாதங்களாக உதயன், தினக்குரல், வலம்புரி பத்திரிகைகளின் விநியோகப் பணியாளர்கள் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களிற்கும் தாக்குதல்களிற்கும் ஆளாகி வருகின்றனர். பத்திரிகைகள் தீயிட்டுக் கொளுத்தப்படுகின்றன. இவற்றின் பின்னணியில் இராணுவமும் ஈ.பி.டி.பியினருமே செயற்படுகின்றனர். யாழ் இராணுவத் தளபதி நேரடியாகவே உதயன் பத்திரிகைக்கு எதிராகச் செயற்படுகின்றான்.

முதலாளித்துவ சமூக முறைக்குள் ஊடக சுதந்திரம் என்பது வெறும் ஏமாற்று அரசியல், போலிச் சுதந்திரம். சுரண்டலிற்கும் ஒடுக்குமுறைக்கும் எதிரான மக்களின் நேரடிப் புரட்சிகரப் போராட்டங்களை திசைதிருப்பி மக்களை முடக்கிவைக்கும் கயமைத்தனந்தான் முதலாளித்துவத்தின் ஊடக சுதந்திரம். இச் சுதந்திரம் மக்களை புரட்சிகர போராட்டங்களிற்கு அழைத்துச் செல்ல உதவும் வகையில் உண்மைகள் வெளிக்கொண்டு வரும்போது ஊடக சுதந்திரம் வெறும் போலிச் சுதந்திரம் என்பது அம்பலமாகும். தமிழ் ஊடகங்கள் மீதான அடக்குமுறைகள் அதனை தெளிவாக வெளிக் காட்டுகின்றன. ஆனால், இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டு மேலும் மேலும் அனுமதிக்க முடியாது. சமூகத்தின் உரிமைக்கான குரலை நசுக்கும் முயற்சியை சமூகமாக எழுந்து நின்றுதான் முறியடித்திட வேண்டும். மாதத்திற்கொரு அல்லது கிழமைக்கொரு ஆர்ப்பாட்டம் அல்லது கிழமைக்கொரு ஊடக அறிக்கையால் ஒடுக்குமுறையை ஒழித்திட முடியாது. ஊடகம் மீதான அடக்குமுறை என்பது தமிழ் சமூகம் மீதான அடக்கு முறையிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாத விடயமாகும்.

அரசின் ஊடக அடக்குமுறையை முறியடிக்க சாத்தியமான சகல போராட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும். ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துள்ள அரசை, ஊடகங்கள் புறக்கணித்திட வேண்டும். ஊடக அடக்குமுறையை நிறுத்தும் வரை அரசாங்கத்தின் நிகழ்வுகள் அனைத்தையும் ஊடகங்கள் புறக்கணித்து அரசாங்கத்தை தனிமைப்படுத்த வேண்டும். மக்கள் பொழுதுபோக்கு அம்சங்களிற்கு அடிமையாகி அரசின் கருத்தியலிற்கு

தொடர்ச்சி 15ம் பக்கம்

# வங்க கடலோடிகளின் கண்ணீர்
# வடபகுதி மீன்பிடியின் இன்றைய நிலை


கடந்தமாத போராட்டத்தில், பிரசுரிக்கப்பட்ட இக்கட்டுரைத் தொடரின் முதற் பாகத்தின் இறுதியில் "1983இல் வடபகுதியின் அதி உச்ச மீன்பிடி காரணமாக, நாட்டின் 40 சதவீதத்திற்கும் அதிகமான மீன் உணவுத் தேவையை வடபகுதி மீனவர்களே பூர்த்தி செய்தனர். அக் காலத்தில் இலங்கையில் இருந்த மீன்பிடி தொழிலாளர்களில் 15 சதவீதமான மீனவர்கள் இந்த சாதனையை செய்தனர் என்று குறிப்பிட்டிருந்தேன்.

வடபிரதேச மீன்பிடி உச்சத்திலிருந்த 83 ஆம் ஆண்டில் மொத்தமான உள்ளக இயந்திரம் பொருத்தப்பட்ட ஆழ்கடல் மீன் பிடிப்படகுகள் (one day boats -3 ½ Tonners) 680 ஆகவும் வெளியிணைப்பு இயந்திரம் பொருத்தப்பட்ட கண்ணாடி இழைப்படகுகள் 2600 ஆகவும், மரவள்ளங்கள் 3865 ஆகவும் இருந்தது. இந்தக் காலத்தில் பிடிக்கப்பட்ட பெருந்தொகையான மீன்கள் பிரதானமாகக் கண்ணாடி இழைப்படகுகளாலும், கரையோரத் தொழிலாளர் பயன்படுத்தும் மரவள்ளங்களாலேயே பிடிக்கப்பட்டது. ரோலர் பயன்பாடு இலங்கையில் 80ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அது பின்வந்த காலத்தில் தடைசெய்யப்பட்டதுடன், யுத்தத்தால் வடபகுதி ரோலர்கள் ஆழ்கடல் செல்வது தடுக்கப்பட்டது. ஆனாலும் வடபகுதியில் இருந்த ரோலர்களின் தொகை 50க்கும் குறைவானதே.

வடபகுதியின் ஆழ்கடல் மீன்பிடி தொழில்நுட்பம், ஆரம்பத்தில் கூறியது போல வலைப்படுத்தலேயாகும். இவ் வலைகளின் கண் கடலின் ஆழத்திற்கேற்பவும், எவ்வகையான மீன்களை மீனவர்கள் குறிவைக்கின்றனர், எந்தவகை காலநிலை நிலவுகிறது போன்ற காரணிகளின் அடிப்படையிலும் வேறுபடும். உள்ளக இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள், யப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 5 அங்குல கண் விட்டத்திலிருந்து 8 அங்குல கண்விட்டமுள்ள, 7 இலிருந்து 10 மீற்றர் அகலமும் 1 இலிருந்து 5 கிலோமீற்றர் நீளமுள்ள வலைகளை உபயோகித்தனர். கண்ணாடி இழைப் படகுகளில் தொழில் செய்தோர் 3 அங்குல கண்விட்டத்திலிருந்து 5 அங்குல கண்விட்டமுள்ள அறக்கொட்டியான் வலை, திருக்கை வலை போன்றவற்றை பயன்படுத்தினார்கள். ஆனால் மரவள்ளம் உள்ளவர்கள் களங்கண்டி, சிறுவலை, கொட்டுவலை, விடுவலை, பறிக்கூடு, சூள், தூண்டில் வலைக்கயிறு, முரல் தூண்டி, சிங்க இறால் பிடித்தல் போன்ற களக்கடல் அல்லது பரவைக்கடல் சார் தொழிலை மேற்கொண்டனர். இதை விட மன்னார் பிரதேசத்தின் சில பகுதிகளில் கரைவலை இழுப்பும் தொழிலாக செய்யப்பட்டது.

> **கடத்தலைத் தடுப்பதற்காகவும், தமிழ் தேசியப் போராட்ட இயக்கங்களின் இந்தியப் பயணங்களை கட்டுப்படுத்துவதற்காகவும், 1977ம் ஆண்டிலிருந்தே மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நடைமுறையிலிருந்த கடல்வலயச் சட்டம் விரிவுபடுத்தப்பட்டு வடபகுதி மீனவர்கள் தொழிற்செய்யும் பிரதேசம் மேலும் குறுக்கப்பட்டது**

இவ்வாறு இலங்கை மீன்பிடி வரலாற்றில் உற்பத்திச் சாதனை நிகழ்த்திய வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரமும், தெற்காசியாவிலேயே மிகவும் திறமையாக கட்டமைக்கப்பட்ட வடபகுதியின் மீன் பிடித் தொழிலுக்கான உட்கட்டமைப்பும், உபகரணங்களும், 83ஆம் வருடத்தின் பின்வந்த யுத்தக் காலத்தில் முற்றாக அழிக்கப்பட்டது.



கடத்தலைத் தடுப்பதற்காகவும், தமிழ் தேசியப் போராட்ட இயக்கங்களின் இந்தியப் பயணங்களை கட்டுப்படுத்துவதற்காகவும், 1977 ஆண்டிலிருந்தே மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் நடைமுறையிலிருந்த கடல்வலயச் சட்டம் விரிவுபடுத்தப்பட்டு வடபகுதி மீனவர்கள் தொழிற்செய்யும் பிரதேசம் மேலும் குறுக்கப்பட்டது. 1977ஆம் ஆண்டுவரை இலங்கையின் கடல்சார் பிரத்தியேக பொருளாதார வலயத்தில் எங்கு வேண்டுமானாலும் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டது. இலங்கையின் கடற்சார் பிரத்தியேக பொருளாதார வலயத்தின், வடகடலின் அகலம் அதன் வடநிலப் பரப்பிலிருந்து 14 இற்கும் 23 நோர்டிக்கள் மைல்/கடல் மைல் இற்கும் இடைப்பட்டது. 1983இல் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பிரதேசம் வட கரையிலிருந்து 10 நோர்டிகல்/கடல்மைல்களாகக் குறைக்கபட்டது. இதை இலகுவாக விளக்குவதானால் 1983 வரை வடபகுதி மீனவர்கள் கச்சதீவுவரை சென்று மீன்பிடிக்க அனுமதியிருந்தது. அது 1983 இறுதியில் இருந்து மட்டுப்படுத்தப்பட்டு கச்சைதீவிலிருந்து 5 கடல் மைல்களுக்கு பின்னாலுள்ள பிரதேசத்திலேயே தொழில்செய்ய அனுமதிக்கப்பட்டது. அப்பகுதி கிட்டத்தட்ட வடகரையிலிருந்து 10 கடல் மைல்களுக்கு உட்பட்ட பிரதேசமாகும். மேற் கூறியபடி 1983இல் உள்ளக இயந்திரதைக் கொண்ட (one day boats 3½ Tonners) 680 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் வடபகுதியில் தொழிலில் ஈடுபட்டன. அக்காலத்தில் வடகடலில் பிடிக்கப்பட்ட மீன்களில் 1/3 பகுதி ஆழ்கடல் மீன்பிடியின் உற்பத்தியாகும். இந்தக் கடல்வலய கட்டுப்பாடானது ஆழ்கடல் படகுகளை உபயோகித்து மீன் பிடிக்கும் தொழிலாளர்களைப் பாதித்து.

படிப்படியாக ஆழ்கடல் மீன்பிடி அருகியது. ஆழ்கடல் மீன் பிடிக்கான படகுகளை வைத்திருந்தோர் சிலர் நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் போன்ற இலங்கையின் மேற்று கரைக்கு தமது படகுகளுடன் புலம்பெயர்ந்தனர். சிலர் படகுகளைத் தென்பகுதி, மற்றும் கிழக்கு மீனவர்களுக்கு விற்று விட்டு இந்தியாவுக்குப் போயினர். 1985 - 1986 காலத்திலும், "ஒப்பரேசன் லிபரேசன்" நடந்த காலத்திலும், ஆழ்கடல் மீன்பிடி முற்றாக அழிந்தது. வடமாரட்சிப் பகுதியைச் சேர்ந்த பல நூறு ஆழ்கடல் படகுகள் இலங்கை இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அவற்றில் பல தீக்கிரையாக்கப்பட்டது. கடற்படையின் "வீரய - சூரய" பீரங்கித் தாக்குதற் படகுகளின் செல் தாக்குதலால் படகுகள் சல்லடையாக்கப்பட்டது. மீன்பிடிக் கிராமங்கள் அழிக்கப்பட்டன. வடபகுதியில் முதன் முதலாக யுத்தத்தால் உள்நாட்டு அகதிகளாக பாரிய புலம்பெயர்வை முதலில் மேற்கொண்டவர்கள் மீனவமக்களே. இக் காலகட்டத்தில் அகதிகளாக புலம்பெயர்ந்தாலும் மட்டுப்படுத்தப்பட்டு, அனுமதிக்கப்பட்ட இரு கடல்மைல் வலயத்துக்குள் வடபகுதி மீனவர்கள் கண்ணாடி இழைப் படகுகளிலும், வள்ளங்களிலும் தொழிற் செய்தனர். இன்று கிடைக்கும் தரவுகளின்படி இத் தொழிலில் 2600 கண்ணாடி இழைப் படகுகளும் 3865 மரவள்ளங்களும் உபயோகப்படுத்தப்பட்டது.

1990இற்கு பின்வந்த காலத்தில் கரையோரத் தொழிலும் பாரிய அழிவைச் சந்தித்தது. குறிப்பாக யாழ் மாவட்டத்தின் மீன்பிடி உபகரணங்களும் மீன்பிடி முறைமைகளும் உள் கட்டுமானமும் சந்திரிக்காவின் ஆட்சிக் காலத்தில் புலிகள் மக்களை யாழிலிருந்து வன்னிக்கு அனுப்பியபோது முற்றாக அழிக்கப்பட்டது. மீன்பிடித் துறைமுகங்கள், கடற்படையின் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆக்கப்பட்டது. மீன் சந்தைகள் விற்பனை நிலையங்கள் ஐஸ் உற்பத்தி நிறுவனங்கள் மீன் பதனிடும் தொழிற்சாலைகள் வலை உற்பத்தி மற்றும் இயந்திரம் பழுது பார்க்கும் நிறுவனங்கள் அழிக்கப்பட்டன. இவை சந்திரிகாவின் யாழ் நோக்கிய படையெடுப்பின் முன்பே புலிகள் யாழ்பாணத்தைக் கட்டியாண்டபோதே அழிவுக்கு உட்படுத்தப்பட்டன. ஆனால் முற்று முழுதான அழிவு சந்திரிக்காவினால் யாழ் மாவட்டம் கைப்பற்றப்பட்ட பின்னரே நிகழ்ந்தது. அதேபோன்று மன்னார் தீவுக்குள் படையினரின் பாரிய போர் நடவடிக்கைகளாலும் அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தியாவுக்கு புலம்பெயர்ந்ததனாலும் மீன்பிடித் தொழில் முற்றாக அழிந்தது.

மறுபடியும் 2001ஆம் ஆண்டுக்கு பின்வந்த யுத்த நிறுத்தக் காலத்தில் சிறிதளவில் வடக்கின் மீன்பிடித் தொழில் புனரமைக்கப்பட்டது. சிறிது சிறிதாக வளர்ச்சிகண்ட வடகடல் மீன்பிடி 26.12.2004இல் மறுபடியும் சுனாமியால் பாரிய அழிவைக் கண்டது. மீண்டும் சர்வதேச உதவியுடன் துளிர்க்க முயன்ற மீன்பிடித் தொழில், 2009 வைகாசிக்கு முற்பட்ட யுத்த காலத்தில் மறுபடியும் அழிவைச் சந்தித்தது.

இன்று வடகடல் மீன்பிடி 2009 யுத்தத்தின் பின் மறுபடியும் தன்னைக் கட்டமைக்க முயல்கின்றது. சுய முதலீடுகள், இலங்கை அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்படும் சில சர்வதேச உதவிகளுடன் வடபகுதியின் மீன்பிடித் தொழில் மறு சீரமைப்புப் பெற்று வருகிறது. கீழ்வரும் தரவுகள் 2012 மார்கழி வரையான, வடபகுதி மீன்பிடியின் நிலையை வெளிப்படுத்துகின்றது.

மேற்படி தரவுகளின்படி வடக்கின் மீன்பிடி மறுபடியும் வளர்ச்சியடையும் நிலை காணப்பட்டாலும் யுத்தத் தழும்புகள், பொருளாதார அழிவுகள், புலம்பெயர்வு , தொடரும் இனவாத அரசியற் சூழ்நிலை, படையினரின் கரையோர நில அபகரிப்பு, துறைமுகங்கள் இன்றும் உயர் பாதுகாப்பு வலயமாக இருப்பது போன்ற காரணிகள் வடகடல் மீன் பிடியின் வளர்ச்சியை தடுக்கும் காரணிகளாக உள்ளன. இவ்வகை உள்நாட்டு காரணிகளை விட மிகப் பயங்கரமான இயற்கை அழிவை ஏற்படுத்துவது - வடகடல் மீன்பிடியைப் பாதிப்பது இந்திய அத்துமீறல் மீன் பிடியாகும்.

(தொடரும்)

# வதை படலம்



எப்போது
எனக்கும் என் தாய்க்கும்
என் சகோதரிக்கும்
உன் ஆதிக்கத்திலிருந்து விடுதலை
எத்தனை தடவைகள்
என்னுடன் என் தலையனை அழுதிருக்கும்
இருட்டில் நான் விடுகிற
ஒவ்வொரு துளிக் கண்ணீரும்
உன்னை நோக்கி
என்னால் விடப்படுகின்ற சாபங்களாகவே இருக்கும்.
உனக்கு தெரியுமா?
என் இதயத்தில்
எத்தனை கீறல்கள் இருக்கின்றன என்று?
நானும் ஒரு சராசரிப் பெண் என்பதை
எப்போதாயினும் நீ உணர்ந்ததுண்டா?
உன் வரண்டு போன கௌரவத்திற்காய்
என்னையல்லவா நீ
கொன்று கொண்டிருக்கிறாய்
என்னை போன்றவர்கள்
எவ்வளவு இன்பமாய்
இன்னும் வாழ்ந்து கொண்டிருக்க
பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடும்
அபலையாகவே நான் இன்னும்...
உன்னுள் சிறிதளவேனும்
மனிதம் என்ற ஒன்றுள்ளதா?
அது இருந்திருந்தால்
இப்போது நான்
இக்கவிதையை எழுதியிருக்க மாட்டேனே !
என் மீது
சிறிதளவேனும் அன்பைக் காட்டாத
ஒரு காட்டு மிருகம் போலவே
இன்றுவரை நீ வாழ்ந்து கழித்தாய்
உன் ஆதிக்கம் என்பது
என்னை
என் நாவை
அடக்கி ஆள்கிறவரை மட்டுமே.

**பெண்ணியாவின்**
**“என் கவிதைக்கு எதிர்த்தல் என்று பெயர் வை”**
**எனும் கவிதை தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.**




உயிர்ப் பலிகளினால்
இயற்கையை அழித் தொழிக்க
அறிவிலி அரசியலில்
கங்கணம் கட்டி நிற்கும்
பாரதத் தமிழ் நாட்டின்
கூடங்குள அணுமின்னிலை முன்
அல்லும் பகலுமாய்
ஆயிரம் மக்கள் கூடி
இலங்கை வரையான
பல்லாயிரம் மக்களின்
எதிர்கால இயல் வாழ்வை
மீட்கப் போராடும் நிலையில்...

இலங்கையில் பயங்கரங்களையும்
இனவெறி அரசியலையும் தகர்த்தழித்து
அனைத்து இன மக்களுக்குமான
‘சம உரிமை’ மலர்த்தும்
சுய இயல் வாழ்வை
மீட்கப் போராடும் நிலையில்...

உலகப் பெரும் பகுதி மக்களின்
அடிப்படை உரிமைகளை
போலிகளால் மூடி மறைத்து
மக்களின் சுய அரசியலை
மறுக்கின்ற கடப்பாட்டை
ஏற்றழியும் அரச இயந்திரத்தை
மீட்கப் போராடும் நிலையில்...

மக்களை ஒடுக்கி அடக்கி
சுரண்டும் சதிமூலப் போர்கள் செய்து
உயிர்களை வதைத்துத் தொலைத்து
இயற்கையை வக்கரிக்கும் வல்லரசார்
இரும்புக் கரங்களை
சிறுகச் சிறுக உடைத்தறுத்து
மக்களின் சுய வாழ்வை
மீட்கப் போராடும் நிலையில்...

வல்லரசார் விசம் குடித்து
அவர் காப்புரிமம் தாங்களான
புல்லுருவி விதைகள் சில
தம் ஆணவக் குறி நீட்டி
எங்கள் அத்தனை போராளியரிலும்
ஏறித்தான் தம் திமிர் அடங்குமெனும்
இவர் எத்தனப் புத்தி காண்க.

**மாணிக்கம்**

## உலக பொருலாதார... பக்கம் 10

இணைந்து போராடவேண்டும். உலக மூலதனம் எல்லை கடந்து சூறையாடும் உலக மயமாதலுக்கு எதிராக, சர்வதேசியவாதிகளாக நாமும் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

இன்றைய தேசம், தேசியவாதம் என்னும் ஆளும் வர்க்க கோட்பாடு, உலகமயமாக்கலின் கீழ் போலியானது பொய்யானது என்பதை அம்பலப்டுத்திப் போராடவேண்டும். மாறாக உலகமயமாதலுக்கு எதிரான சொந்த தேசிய பொருளாதாரத்தை முன்னிறுத்தி தேசிய நலனை தேசியமாகக் கொண்டு, உலகமயமாதலின் கீழான மக்கள் விரோத தேசியத்தை தனிமைப்படுத்தி அம்பலப்படுத்திப் போராட வேண்டும்.

இன்று அரசுகள் முன்னெடுக்கும் அபிவிருத்தி அரசியல் என்பது, நிதி மூலதனத்தை உள் திணித்து வட்டி அறவிடும் நிதி மூலதனத்தின் கொள்கையாகும். இதை இனம் காட்டி அபிவிருத்தி அரசியலுக்கு எதிராக போராட வேண்டும். இப்படி உலகமயமாதலின் கீழான தேசிய அரசு மட்டுமல்ல, மக்களை மந்தையாக்க முன்தள்ளும் ”ஜனநாயகம், சுதந்திரம், தேர்தல், சட்டம், நீதி, பாரளுமன்றம்,.. ” என அனைத்தும், உலக மூலதனத்தின் நலனை சார்ந்துதான் செயற்படுகின்றது என்பதை அம்பலப்படுத்தி போராடவேண்டும். இதற்கு பதில் மக்கள் தங்கள் சொந்த அதிகாரத்துக்காக போராட வேண்டும். இதன் மூலம் இந்த மக்கள் விரோத உலக மூலதனக் கொள்கையில் இருந்து, மக்கள் தங்களைத் தாங்கள் விடுவித்துக் கொள்ள முடியும். இந்த வகையில் மக்களை விழிப்புறம் வண்ணம், உலக பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராட வேண்டும்.

## மீண்டும் ஜெனிவா... பக்கம் 4

சில சந்தர்ப்பங்களில் இலங்கை அரசாங்கத்தையும் உலக ஏகாதிபத்தியத்தின் போலி கரிசனைகளையும் அம்பலப்படுத்திட வேண்டும். சமாதானமான வழிமுறைகளோ சமரசங்களோ இங்கு வேலைக்காகாது. மக்களை அரசியல் மயப்படுத்தி பொருளாதார, கருத்தியல், அரசியல் போராட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். குறிப்பாக சகல அட்டூழியங்களையும் செய்து கொண்டு மகிந்த மறைந்து நிற்கும் பேரினவாதத்தை தோலுரித்து தோற்கடிக்க வேண்டும். யுத்த குற்றங்கள் தொடர்பாக சிங்கள மக்களிற்கு தெளிவுபடுத்த புரட்சிகர சக்திகளுடன் இணைந்து செயற்படல் வேண்டும். இதன் அவசியத்தை தமிழர்கள் உணரவில்லையாயினும், இதன் பாரதூர தன்மைகளை சிங்கள பேரினவாதிகள் உணர்ந்துள்ளனர். அதன் காரணமாக தான் இதனை செய்யமுனைபவர்களை பேரினவாதிகள் முண்டியடித்துடிகொண்டு ஒடுக்குகிறார்கள். தமிழர் தரப்பு நியாயங்களை சர்வதேசத்திற்கு போலவே சிங்கள மக்களிற்கும் தெளிவுபடுத்த வேண்டும். உணமையில் யுத்தக் குற்றவாளிகள் மீதான விசாரணையை மக்கள் மன்றங்கள் முன் விசாரணை செய்திட அழுத்தம் கொடுத்திட வேண்டும்.

## வெறி நாய்களை ... பக்கம் 3

உருவாக்கி தூண்டி விட்டவர்களால் கூட கட்டுபடுத்த முடியாது. கதாநாயகன் அந்தஸ்தும் பிற்போக்கு தனமும் ஒரு பக்கம் மறுபுறம் தாழ்வு மனப்பான்மை என ஆதிக்கம் செலுத்துவதன் காரணமாக பிக்குகள் போத்தலை திறந்து கொண்டு வெளியே வரும் பூதம் போல் வெளி கிளம்பியுள்ளனர். அவர்களாலும் அவர்களுக்கு பின் கதவால் அனுசரணை வழங்கிய அரசாங்கத்தினாலும் இதனை கட்டு படுத்த முடியாது.

சில இடங்களில் முஸ்லிம் வியாபாரிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துமாறும் இல்லாவிடின் கொலை செய்து விடுவதாகவும் மிரட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.வெறி நாய்களை கட்டவிழ்த்து விட்டால் நடப்பது இது தான். வெறி நாயை கட்டவிழ்த்து விட்டால் அதனை எதிர்கொண்டு தான் ஆக வேண்டும். அரசாங்கம் ஜெனீவா செல்லும் தருணம் நாட்டில் பொருளாதார நெருக்கடி எரிமலையாய் வெடிக்க இருந்த தருணம் ஆகும். மறுபுறம் இனவாதிகளும் மதவாதிகளும் தலை வெறி ஆடும் கட்டத்திலாகும். அரசாங்கத்திற்கு இருக்கும் ஒரே மாற்று வழி ஜெனிவாவை காரணம் காட்டி நாட்டிற்கு எதிராக பெரும் சதி திட்டம் திட்டபடுவதாக கூறி ஏகாதிபத்திய எதிர்ப்பு கோசத்தை முன் வைத்து மக்களை திசைதிருப்பி பிரச்சனைகளை மூடி மறைப்பதாகும். அரசாங்கம் ஏகாதிபத்தியத்துடன் முரண்பட பொருளாதார அடிப்படை ஒன்றும் இல்லை. முறையான பொருளாதார திட்டம் இல்லை. 2010 ம் ஆண்டில் நாட்டின் ஏற்றுமதியில் 35மூ அமெரிக்கவிற்கும் 21மூ ஐரோப்பிய யூனியனிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந் நிலைமையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது வெறும் அரசியல் நாடகம் மாத்திரமே ஆகும். ஜெனீவா மாநாட்டிற்கு அரசாங்கம் வெளிக்காட்டும் பிரதிபலிப்பு உலக மூலதனமும், ஆதிக்க அரசிலும் இலங்கையை சுற்றி வளைத்திட போகின்றன. அதன் காரணமாக உண்மையான எதிரி தப்பி விடுவதுடன் இந்த சிக்கல் ஒடுக்கப்பட்டவர்களுக்கு புரியாமல் விடுவதும் நடக்கபோகின்றது. விடை தேட வேண்டுய வினா இதுவே.

## பேய்களின் ஆட்சியில் ...பக்கம் 13

பலியாகாமல் அரச ஊடகங்களை முற்றாக புறக்கணித்திட வேண்டும். இத்தகைய உறுதியுடன் அரசாங்கத்தையும் அதன் ஊடகங்களையும் முற்றுமுழுதாக புறக்கணித்து எதிர்ப்பை வெளிப்படுத்துவதே தற்போதைய மிகச் சாத்தியமான சகலரும் ஒன்றிணையக் கூடிய போராட்டமாகும்.

அரசின் ஊடக அடக்குமுறைக்கு எதிராக விசனங்களை வெளிப்படுத்திக்கொண்டு, பின் கதவால் அரச ஊடகங்களை வீட்டிற்குள் அனுமதிப்பதென்பது அரசிற்கு ஆதரவளிப்பதற்கு சமமான நடவடிக்கையாகும். மகிந்த பாசிசத்திற்கு ஒத்துழையாமையே அதனையும் மகிந்த பாசிசத்தில் கோலோச்சும் பிணங்களையும் எதிர்க்கும் எளிய முறையாகும்.

மகிந்த சக்கராதிபத்திய பாசிச ஆட்சி, மக்களுக்கான ஆட்சி அல்ல. முதலாளித்துவத்தை முழுமையாக சமூகத்திற்குள் திணித்திடும் முதலாளி வர்க்கத்திற்கு சேவை செய்யும் ஆட்சியாகும். ஒடுக்குமுறை, முதலாளித்துவத்தின் நிலவுகைக்கான தவிர்க்க முடியாத நிபந்தனையாகும். மகிந்த சக்கராதிபத்திய பாசிச ஆட்சி, ஒடுக்குமுறையையும் அபிவிருத்தியையும் சமாந்திரமான முறையில் சூட்சுமமாக கையாண்டு மக்களை குழப்பத்தில் ஆழ்த்தி அடிமைப்படுத்தியுள்ளது. இந்த மாயையை கட்டவிழ்க்கும் ஊடகங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குதல் என்பது முதலாளிதுவத்தின் இயல்பாகும். ஆகவே, ஊடக அடக்குமுறையை மட்டும் எதிர்த்து போராடுவது ஹெலியை கல்லெறிந்து வீழ்த்த முயற்சிப்பதற்கு சமமானதாகும். ஒடுக்குமுறை இயந்திரத்திற்கு ஒத்துழையாமையுடன், ஒடுக்கப்படும் சகலரையும் ஒன்றிணைத்து ஒடுக்குமுறைக்கு எதிராக மார்க்சியம் முன்மொழியும் வழிமுறையை விட வேறொரு தெரிவும் தற்போதைக்கு எம்முன் இல்லை.

# போராட்டம்

400/2, தலவத்துகொட பாதை, மாதிவெல, கோட்டே
தொலைபேசி/தெலைநகல்: 094-112799432
mpssrilanka@gmail.com
http://www.peoplesstruggle.com


# வட-கிழக்கில் இராணுவ ஆட்சியை அகற்று
## சமவுரிமை இயக்கத்தினால் நாடெங்கும் கையெழுத்து வேட்டை

வட-கிழக்கில் இராணுவ ஆட்சியை அகற்று, வட-கிழக்கு மக்களின் வாழ்வுரிமையை பறிக்காதே, அரசியல் சிறைக்கைதிகளை உடன் விடுதலை செய், கைதுகள் கடத்தல்களை உடன் நிறுத்து, வட-கிழக்கில் மக்களின் மண்ணை கொள்ளையடிக்காதே ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சமவுரிமை இயக்கத்தினால் நாடெங்கும் பிரச்சாரமும் நீண்ட பாதாகையில் கையெழுத்து சேகரிப்பும் நடந்து வருகின்றது. கடந்த மாதம் மட்டக்களப்பிலும் காலி நகரிலும், கையெழுத்து சேகரித்தல் மற்றும் பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது. ஏற்கனவே இவ்வாறான கவனயீர்ப்புப் போராட்டங்கள் கொழும்பு, திருகோணமலை, வவுனியா, யாழப்பாணம் ஆகிய இடங்களிலும் நடாத்தப்பட்டது.

● காலி






● மட்டக்களப்பு




# மறுப்பு தெரிக்கும் அரசியலும் வெற்றி கொள்ள வேண்டிய சவாலும்

புதிய தாராளமயவாத முதலாளித்துவம், பிற்போக்குத்தனம், இரணுவ ஆதிக்கம் என சகலதையும் வரிந்துகட்டிக்கொண்ட ராஜபக்ச படையணியின் அரசியல், எம் சமூகத்தினுள் ஏகப்பட்ட முரன்பாடுகளை தோற்றுவித்துள்ளது.தன்னுடன் அரசியல் ரீதியாகவோ, கொள்கை ரீதியாகவோ ஒத்திசைவிற்கு வராதவர்களை எச்சரித்து, தேசத்துரோக குற்றம்சாட்டுவதிலிருந்து வெள்ளை வானில் கடத்திச்சென்று படுகொலை செய்வது வரையான பெரும் பழிவாங்கல்களை மேற்கொள்ள அரசாங்கம் தனது தரப்பினருக்கு தாராளமாக இடம்வழங்கியுள்ளது. கடந்த காலங்களில் யாழ்பல்கலைக்கழகத்தினுள் அத்துமீறி தலையீடுசெய்து மாணவர் தலைவர்களை கைதுசெய்து, அவர்கள் மீது பயங்கரவாத குற்றச்சாட்டுக்களை சுமத்திய போது நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம், அதன் பின்னர், நீதியரசர் மீதான தேசதுரோக குற்றசாட்டையும், அதனை விசாரனை செய்ய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவையும் மையப்படுத்தி எழுந்த நிறைவேற்று துறையா-சட்டவாக்கதுறையா-நீதித்துறையா என நடந்த குடுமிபிடி சண்டையையும் நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம்.

இதற்கு சமூகத்தில் இரண்டுவிதமான பிரதிபலிப்புக்களை காணக்கூடியதாகவிருந்தது. முதலாவது அனைத்தையும் உதாசீனப்படுத்தி கவனத்தில்கொள்ளாது அமைதியாகவும் அலட்சியமாகவும் இருந்த போக்கு. சமூகத்தில் பெரும்பான்மையானோரின் பிரதிபலிப்பு இவ்வாறனதாகவே இருந்ததின் காரணம், ஒன்றில் ராஜபக்ச படையணியின் ஏமாற்று அரசியலை ஏற்றுக்கொண்டமை, இல்லையெனில் “இதெல்லாம் நமக்கு தேவையில்லாத விடயம்” எனும் அலட்சிய பின்தங்கிய எண்ணம். மற்றையது தற்போதைய படையணியின் மகிந்தவின் முகத்திற்கு பதிலாக வேறு முகத்தை மாற்றீடு செய்திட அழுத்தம் கொடுக்கும் போக்காகும். இதன்காரணமாக அநேக ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெற்றன. இடதுசாரிகள் என்று கூறிக்கொள்பவர்கள் நீதிமன்ற சுயாதீனத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் பங்குதாரர் ஆகியதிலிருந்து நீதியரசர்க்காக தேங்காய் உடைப்பது வரை சென்றமை இதன் காரணமாகத்தான். இவர்களின் நோக்கம் முதலாளிதுவத்தை பாதுகாத்துக் கொண்டு ராஜபக்சவிற்கு பதிலாக வேறொருவரை அதிலிருத்துவதாகும். அரசின் மூன்று தூண்களை பாதுகாக்கும் உணர்ச்சிமிக்க உரைகளிலிருந்து தீவிர வேலைத்திட்டங்களிற்கான முன்னெடுப்புக்கள் அனைத்தும் அரங்கேறுவதும் அதன் காரணமாகத்தான்.

தற்போது இடதுசாரிகளின் பணி நித்திரை கொள்ளும் நகரினை எழுப்பிடும் கலைஞனின் பாத்திரத்தையும், இத்திரிபு வாதிகளை திருத்திடும் ஆசானின் பாத்திரத்தையும் ஒரே நேரத்தில் வகிப்பதாகும். முதற்படி இவ் ஏமாற்றும் அடிமைப்படுத்தும் அரசியலிற்கு “மறுப்பு” தெரிவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களை உருவாக்குவதாகும். ராஜபக்ச படையணியின் பிரபலவாத அரசியலிற்கும் அதற்கு எதிரான முதலாளித்துவ பிரபலவாத அரசியலிற்கும் உறுதியாக மறுப்பு தெரிவித்திடல் வேண்டும். அதற்கு சரியான தலைமைத்துவம் அவசியம். முதலடியை சரியாக வைப்பதன் மூலமே தலைமைத்துவத்தை வழங்கிட முடியும். இடதுசாரிகள் இதை முதலில் மறுத்திட வேண்டும். உறுதியாக மறுத்திட வேண்டும்.

“இக்னாசியோ சிலோனே” எழுதிய “பாணும் வைனும்” எனும் நூலில் பின்வருமாரு குறிப்பிடுகிறார். ஆயிரக்கணக்கான பத்திரிகைகளும், பத்திரிகை ஆசிரியர்களும் ஒரே கருத்தை மீண்டும் மீண்டும் கூறினாலும் ஒருவரேனும் உரத்து மறுப்பு தெரிவிப்பாராயினும், சுவரிலேனும் மறுப்பு தெரிவித்து எழுதுவாராயின் பிரச்சார ஆதிக்கத்தை முறியடித்திட முடியும். முதலாளித்துவத்தை வளமூட்டும் பிரபலவாத அரசியலிற்கு சகல ஊடகங்களிலும் ஆர்ப்பாட்ட களங்களிலும் மறுப்பு தெரிவித்திடல் வேண்டும். முதலில் மறுப்பை உறுதியாக தெரிவிப்பதுவே பலரை மறுப்பு தெரிவித்திட செய்யும். அதனை போராட்டம் மற்றும் ஊடகங்களில் ஆரம்பித்திட வேண்டும். அதனை செய்யாது அமைப்பாளர்களின் பணியை செய்திட முடியாது. ஆரம்பிக்க வேண்டியது இவ்விடத்திலிருந்துதான். -

# அன்பு பிறக்கும் சமூகம்
## தேடிய சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

சுதந்திரத்திற்கான பெண்கள் அமைப்பினால் மார்ச் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினத்தன்று “அன்பு பிறக்கும் சமூகம்” என்ற தொனிப்பொருளில் கொழும்பில் பேரணியும் கூட்டமும் நடைபெற்றது. இப்பேரணியில் பெருந்திரளான பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டதோடு, பெண்கள் விற்பனை பண்டமாக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பதாதைகளையும் ஏந்திச் சென்றனர். பேரணி முடிவில் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைப்பின் தலைவி திமுது ஆட்டிகல சிறப்புரையாற்றினார்.











கோட்டே, மாதிவெல, தலவத்துகொட பாதை, இலக்கம் 400/2ல் வசிக்கும் ஜூட் சில்வா புள்ளே ஆகிய என்னால் கடவத்தை, கோனஹேன பாதை, சத்தர்மதிலகாராம மாவத்தையில் அமைந்துள்ள ஸ்பெக்ட்ரா எட்வடைசிங் நிறுவனத்தில் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.